தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 மே 1 (1 - 5 - 1983) விலை 65 காசு — இதழ் எண்: 17 | பகுதி 22-23

★ மே நாள் என்பது வெறும் கொண்டாட்டத்தோடு நிறைவடைவதன்று!

★ நம் நாட்டில் தொழில் நலத் திட்டங்களும் தொழிலாளர் நலத் திட்டங்களும் இன்னும் முழு அளவில் வெற்றி பெறவில்லை.

★ தொழிலாளர் கூட்டுறவு முயற்சிகள் சாதிகள், கட்சிகள் ஆகிய பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டு இயங்குதல் வேண்டும்!

★ பாவலரேறு அவர்களின் மே நாள் அறிக்கை!

சென்னை மே-1.

நம் நாட்டில் உலகத் தொழிலாளர் நாளாகிய மே 1-ஆம் பக்கல் வெறும் கொண்டாட்டத்துடன் மட்டும் அடங்கி விடுகிறது. இங்குள்ள அனைத்துக் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் மே நாள் கூட்டங்களை ஆங்காங்கு அமைப்பதும், அவற்றில் உணர்வெழுச்சியுடன் பேசுவதும், அறிக்கைகள் விடுவதும், இந்த மே நாள் நினைவு கொண்டாட்டம் தொடங்கிய நாளிலிருந்து ஒரு மரபு (சம்பிரதாய)ப் பழக்கமாகப் போய் விட்டது.

அரசுக் கட்டிலில் உள்ள ஆளுங்கட்சியைச் சார்ந்த அமைச்சர்களும் குறிப்பாகத் தொழிலாளர் நல அமைச்சரும், அந்த நாளை ஒட்டித் தொழிலாளர் நலனுக்கெனக் கூறி ஓரிரண்டு திட்டங்களை அறிவித்து விடுகின்றார்கள். ஆனால் அத்திட்டங்கள் செயலுக்கு வருகின்றனவா இல்லையா, என்பது வேறு செய்தியாகப் போய் விடுகிறது.

நம் நாட்டைப் பொறுத்த அளவில் தொழில் நலம் என்பதும், தொழிலாளர் நலம் என்பதும் வெறும் கண்துடைப்பாகவே பேசப் பெற்றும் செயல்பட்டும் வருகின்றன. இங்குள்ள தொழிலாளர் கழகங்கள் கட்சிக்கு ஒன்றாகச் செயல்படுவதே, தொழிலாளர்களின் நலன்களுக்கு உகந்த சரியான போக்கின்மையைக் காட்டுகிறது. ஒரு கட்சியைச் சார்ந்த தொழிலாளர் அமைப்பு அரசை நோக்கி முன் வைக்கின்ற கோரிக்கைகளையும், நடத்துகின்ற பேரணி போராட்டங்களையும், வேறு கட்சியையோ, அல்லது எதிர்க்கட்சியையோ சார்ந்த வேறு தொழிலாளர் அமைப்பு முறியடித்தோ அல்லது எதிர்ப்புக் காட்டியோ, அல்லது ஒத்துழைக்காமலோ, பயனிழக்கச் செய்து விடுவது தொழிலாளர் நல இயக்கத்திற்கே ஒரு தொய்வை உண்டாக்கி விடுகிறது. தொழிலாளர் நலத்துக்கென்றே கட்சிச் சார்பற்ற ஓர் அமைப்பு இன்னமும் தோன்றாமல் இருப்பது, ஒரு பெரிய வலுக் குறைவாகப் போய் விட்டது. எனவே இங்குள்ள தொழிலாளர்கள் தங்கள் நலத்திற்கான முழுப் பயன்களையும் முற்றாகப் பெறவேண்டுமானால், அல்லது தங்கள் குரலும் கோரிக்கைகளும் வலிந்து ஒலிக்கப் பெற வேண்டுமானால், முதலில் தங்களுக்கென்று, அரசியல் சார்பற்ற ஒரு பேரியக்கத்தை அல்லது ஓர் அமைப்பை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். இவ்வியக்கத்தில் அரசியல் தலைவர்களின் தலையீடுகள் அறவே இல்லாதபடி பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

அடுத்து, தொழிலாளர்கள் தங்கள் தொழில் பிரிவுகளால் மட்டுமே வேறு வேறு அமைப்புகளை அமைத்துக் கொள்ளலாமே யொழிய, இந்த நாட்டின் அனைத்து முன்னேற்றங்களுக்கும் பெருத்த முட்டுக்கட்டையாக இருக்கும் சாதியமைப்புகளில் கருத்துச் செலுத்தவே கூடாது. மற்றும், அந்தச் சாதியமைப்புகள் தங்கள் தொழிலாளர் நலன்களில் தலையெடுக்கும்படி செய்து கொள்ளவே கூடாது.

மேலும் தொழிலாளர் நலன்கள் என்று சொன்னாலே அவை இங்குள்ள பொதுவுடைமைக் கட்சியொன்றுக்கு மட்டுமே உரிய சிக்கல்களாகக் கருதப்படும் மனநிலையைத் தவிர்த்து விட்டு, அவை அனைத்துக் கட்சிகளுக்கும் அல்லது மக்களுக்கும் உரிய பொதுக் கோரிக்கைகளாகக் கருதப்படும் மனநிலையை உருவாக்குதல் வேண்டும். தொழில் நலமும் தொழிலாளர் நலமும் பொது மாந்த நலமாகவே கருதப்பட வேண்டும். இனி, தொழில் நலமும் தொழிலாளர் நலமும் வேறு வேறு சிக்கல்களாகக் கருதப்படும் நிலையும் ஒழிய வேண்டும். தொழில் வளர்ச்சியைப் பற்றிச் சிந்திக்கும் பொழுது, அல்லது திட்டமிடும் பொழுது தொழிலாளர் நலத்தையும் அல்லது வளர்ச்சியையும் சேர்த்தே சிந்திக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, ஒரு தொழிலமைப்பை அல்லது தொழிற்சாலையை அமைப்பதற்குத் திட்டமிடப் பெறுகிறது என்றால் கூடவே அதில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கான குடியிருப்பு, கல்வி, வாழ்க்கை வசதிகள் முதலிய அனைத்தும் இணைந்தே சிந்திக்கப்பட வேண்டும்.

இனி, இறுதியாக ஒன்று. தொழிலாளர்கள் பெரும்பாலும் மத அடிமைகளாக இருப்பது இந்த நாட்டின் கேடான அமைப்பு நிலைகளில் ஒன்றாக இருக்கிறது. இது அறிவியலுக்கும் கூட்டுறவியலுக்கும் முரண்பட்ட அடிப்படையாகும். தொழிற் கழகங்களில்தான் மத விழாக்களும் மூட நம்பிக்கைகளும் மிகுந்த ஆளுமை செய்கின்றன, இவற்றால், தொழில் நலச் சிந்தனைகள் தகர்க்கப் படுகின்றன. ஆளுக்கொரு கடவுளும், அதற்கான கோயிலும், அதற்கான விழா விடுமுறைகளும் தொழிற்சாலைகளிலும், தொழிலாளர் அமைப்புகளிலும் குடிகொண்டு, அவர்களின் வளர்ச்சிப் பாடுகளுக்குப் பெருந்தடைகளாக உள்ளதைத் தொழிலாளத் தோழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

இவ்வகையான தடைகளும், நடைகளும் தவிர்க்கப் பெற்று, ஒட்டுமொத்தமான தொழிலாளர் நல நோக்கங்களும் பயன்களும் பெருக வேண்டுமென, இவ்வுலகப் பெருவிழா நாளாகிய மே நாளில் இங்குள்ள அனைத்துத் துறைத் தொழிலாளர்களையும் கேட்டுக் கொள்கிறோம். வாழ்க! தொழிலாளர் ஒற்றுமை!

-பெருஞ்சித்திரனார்

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும்

உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உணர்வியக்கம், உ. த. மு. க.

★ அவரவர் தேசிய இனத்திற்குப் பொருத்தமான பொதுவுடைமை வேண்டும்!

★ இழிவுகளையும் வேற்றுமைகளையும் கற்பிக்கிற இந்துமதத்திற்குத் துணையாக இருந்துகொண்டு, உண்மையான பொதுவுடைமையை இந்த நாட்டில் விளைவிக்க முடியாது!

★ முனைந்து விட்டோம்! இனிச் செய்வோம்.

★ தமிழ்நிலம் வெளியீட்டு விழாவில் பாவலரேறுவின் இறுதியான 9-ஆம் தொடர்!

அடுத்தது, தமிழ்த் தேசியத்திற்குப் பொருந்திய வகையிலே, ஒவ்வொரு தேசிய இனத்திற்கும், தக்கவாறு பொதுவுடைமைக் கொள்கையிலே சில மாற்றங்கள் செய்து கொள்ள வேண்டும்! பொதுவுடைமை என்பது பொதுவான ஒரு கொள்கை! அது மக்கள் நலம் கருதிய கொள்கை! பொதுப் பொருளை உடைமையாக்குகிறது; எல்லாருக்கும் பொதுவான நிலையிலே, எல்லாரும் நலம் பெறவேண்டும் என்ற நோக்கத்திலே வரையறுக்கப்பட்ட ஒரு சிறந்த மெய்மம் 'தத்துவம்' அந்த நிலைகளை நாம் உருவாக்க வேண்டுமானால், உருசியப் பொதுவுடைமையா, சீனப் பொதுவுடைமையா. என்றெல்லாம் ஆராய்ச்சி பண்ணிக் கொண்டு கிடக்கிறதை விட, மூலமான பொதுவுடைமைக் கொள்கை, நம்மினத்துக்குப் பொருத்தமான வகையிலே எப்படிச் செய்து கொள்ளலாம் என்று சிந்திக்க வேண்டும். அது என்ன என்று நீங்கள் நன்றாக எண்ணிக் கொண்டு, நீங்கள் அந்தக் கொள்கையைத் தெரிந்து கொண்டு அதில் ஈடுபடலாம். துணை நிற்கலாம்!

இதை எதற்கு நான் சொல்கிறேன்; நீங்கள் இந்த இயக்கத்திலே சேரவேண்டும் என்பதற்காக அன்று. நீங்கள் சேர்ந்தாலும் சரி, சேராது போனாலும்சரி, இது வளரும்! வளரும் என்றால் அதாவது உறுப்பினர்களைச் சேர்த்து அன்று! உறுப்பினர்களைச் சேர்க்கிறதெல்லாம் எப்படியென்று எங்களுக்குத் தெரியும்! எங்கள் கட்சியில் பத்து இலக்கம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்கிறான். உடனே, இன்னொருவன் சொல்கிறான். இவன் திராவிட முன்னேற்றக் கழகம் என்றால், நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அதுவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் என்று! என்ன?...எப்படி?... அதேபோலத்தான் நாங்களும் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சில பேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

இது உலகத் தமிழின முன்னேற்றக்கழகம். எல்லா நாடுகளிலும் இதற்கு உறுப்பினர்கள் உண்டு! எல்லா நாடுகளிலும் கிளைகள் உண்டு. நீங்கள் படித்துப் பார்த்தால் தெரியும். எந்தெந்த நாடுகளிலெல்லாம் இது பரவியிருக்கிறது என்ற விளக்கங்களெல்லாம வரும்! எந்தெந்த நாட்டிலே எத்தனையெத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதெல்லாம் வரும்! 'சும்மா', உங்களையெல்லாம் மறக்கடிக்கும்படி ஏமாற்றுதற்குரிய கொள்கையன்று, இதற்கு. பொதுவுடைமையைப் பொறுத்தமட்டில், நம்முடைய முழு நோக்கம் என்னவென்று சொன்னால், பொதுவுடைமைக் கொள்கையை, அவரவர்களுடைய தேசிய இனத்திற்குப் பொருந்திய வகையிலே வரையறுக்க வேண்டும் என்பது. என்ன அது? நம்முடைய இனம் தனி அமைப்பு! இந்த இனத்திலே பல இழிவுகள்! தாழ்ச்சிகள்! வீழ்ச்சிகள்! அடிமை நிலைகள்! மூடநம்பிக்கைகள் எல்லாம் இருக்கின்றன. இந்த நிலைகளையெல்லாம் போக்காமல் நீங்கள் எங்கே பொதுவுடைமையை வித்திட முடியும்? இது, ஒரு கரம்பு நிலத்திலே அல்லது பாறை மேலே விதையை ஊன்றுவது போல உயர்ந்த விதையாக இருக்கலாம்; ஆனால், ஊன்றப்படுகின்ற நிலம், பண்பட்ட நிலமாகவன்றோ இருக்க வேண்டும்! அப்போதுதான் அந்தக் கொள்கை பயனைத் தரும்! எனவே இவர்களிடத்திலே போய், பொதுவுடைமையைச் சொன்னால்? மக்கள நல உரிமையே எய்தவில்லையே; பொருள் உரிமை எப்படி எய்துகிறது! பொதுவுடைமையாய் இருங்கள் ஐயா, என்றால், ''அது என்னங்க என் தலைவிதி எப்படியிருக்கிறதோ அதுபடிதான் எனக்கு வரும்'' என்று சொல்கிற உணர்ச்சி உடைய நாட்டிலே, உண்மையான பொதுவுடைமை முயற்சி பெற்றிட முடியுமா?

பொதுவுடைமைத் தலைவர் சொல்கிறார்; (உண்மையாக எத்தனை நிலைகளிலே மூட நம்பிக்கைகளிலே அந்தக் கட்சியை இழுத்தடிக்கிறார்!) மதங்களை யெல்லாம் தாக்கக் கூடாது? எந்த மதத்தைத் தாக்கக் கூடாது? பௌத்த மதத்தை நாம் தாக்கினால் நாம் தாக்கக் கூடாது என்று சொல்லுவானா? இல்லை, சமண மதத்தைத் தாக்கினால் தாக்கக் கூடாது என்று சொல்லுவானா? இசுலாமைத் தாக்கினால், தாக்கக் கூடாது என்று இந்த நாட்டிலே சொல்வானா? யாரும் சொல்ல மாட்டார்கள்! இந்து மதத்தைத் தாக்கினால் மட்டுந்தான் அந்த மதத்தைத் தாக்கக்கூடாது என்று சொல்லுவான்.

இந்து மதந்தான் இந்த நாட்டினை ஆளுமை செய்கிறது; பின்னே யார்? சிரீரங்கத்திலே ஆறு கோபுரங்கள் அங்கே கட்டப் பெற வேண்டும்! உடனே, அந்த ஆள் என்ன பண்ணினார். காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள்...நேரே இந்திரா காந்திக்கு எழுதினார். பெரிய வேலை அப்படியே நிலுவையாக இருக்கிறது, எச்சமாக இருக்கிறது. நீங்கள் தான் இதற்குத் துணையிருக்க வேண்டும். ஆறு கோபுரங்கள் இன்னும் கட்ட வேண்டும் அதை நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கடிதம் எழுதினார்.

உடனே அந்த அம்மா, எல்லா மாநிலத்துக்கும் உடனே (செய்தித் தாள்களில் நீங்கள் பார்த்திருப்பீர்கள்!) மடலெழுதி, ஏழு இலக்கம், எட்டிலக்கம, ஒன்பதிலக்கம் உருவா,... ஒவ்வொரு கோபுரமும் ஒவ்வொரு மாநிலம் கருநாடகம ஒரு கோபுரம். ஆந்திரம் ஒரு கோபுரம், கேரளம் ஒரு கோபுரம், தமிழகம் ஒரு கோபுரம், மராட்டியம் ஒரு கோபுரம் கட்டித்தர வேண்டும் என்று மாநில அமைச்சர்களுக்கு மடல் எழுதுகிறார்கள். மாநில அரசுக்கு நடுவண் அரசு எழுதுகிறது என்று செய்தித் தாளில் போடவில்லை! இந்திரா காந்தி அவர்கள் எழுதினார் என்று செய்தித் தாளில் போட்டிருக்கிறான்! படித்துப் பார்த்திருப்பீர்கள் நீங்கள்!

தண்ணீர் வரவில்லை ஐயா, காவிரியைத் திறந்து கொஞ்சம் விடச் சொல்லுங்கள் என்று. நாங்கள் கத்தாகக் கத்தினால், அதை வந்து கவனிப்பதற்கு ஆள் இல்லை! அதைப்பற்றி மடல் எழுத அந்த அம்மாவுக்கு முடியவில்லை. வாயைத் திறந்து சொல்லவில்லை! ஆனால் இதற்குச் சொல்லுகிறார்கள் என்று சொன்னால், இந்த நாட்டிலே மத ஆளுமை எப்படியிருக்கிறது! இந்த ஆளுமையை வைத்துக் கொண்டு பொதுவுடைமை உணர்ச்சி இங்கு வளருமா? நடக்குமா? எனவே, முதலிலே நமக்கு இருக்கிற இழிவு துடைக்கப்பட வேண்டும்! அதற்குத் தான் தந்தை பெரியார் அவர்கள், இன இழிவு தான் முதலிலே இந்த நாட்டிலே எதிர்க்கப்பட வேண்டியது என்று சொல்லி அதை முன் வைத்துப் போராடினார்கள். அப்படிப் போராடினவர்கள் பொதுவுடைமை மலரக்கூடாது என்று எங்குமே சொல்லவில்லை.

உண்மையான பொதுவுடைமைக் கொள்கையைக் கொண்டவர்கள் இந்த நாட்டிலே இல்லை அவர்கள் எல்லாரும் ஏதோ ஒரு மதத்துக்குச் சார்பாக அக்கொள்கையை வளைத்து நெளித்துச் சொன்னார்களே தவிர, அந்தக் கொள்கைக்காக மதம தவறுடையது என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை!

அப்படிப்பட்ட நிலையிலே தான் நாம் சிலவற்றை சிந்திக்க வேண்டும்! நீங்கள், ஏதோ ஒரு பேச்சுக்காக, கூட்டத்திற்காக, ஏதோ விழா நடத்துவதற்காக— பணம் வருகிறது; காசு பணம் இருக்கிறது—விழா நடத்துகிறார்கள் என்று எண்ண வேண்டாம். நாங்கள் விழா நடத்துவது காசு பணத்துக்காக என்றால், இந்தப் பேச்சு பேச மாட்டோம். இந்தப் பேச்சைப் பேசுகிறதனாலே எங்களுக்கு வருகிற தொல்லைகளை நீங்கள் உணர முடியாது; அவ்வளவு தொல்லைகள்! அதுவும் பணந்திரட்டுவதற்காக என்றால் இந்தப் பேச்சா பேசுவோம்? எனவே எங்களுடைய நோக்கம் தமிழர்கள் எப்படியாவது இன்னும் நூறாண்டு இல்லை, இருநூறாண்டு இல்லை, ஐநூறு ஆண்டு இல்லை, ஒன்றுபட்டு ஆக வேண்டும். அல்லது நம்மிடத்திலே ஒவ்வொருவரிடத்திலும் இருக்கிற வேறுபாடுகளைக் களைந்து கொண்டாக வேண்டும். மனவேறுபாடு, அறிவு வேறுபாடு கருத்துவேறுபாடு, கொள்கை வேறுபாடு, வினை வேறுபாடு, செயல் வேறுபாடு இத்தனையும் நாம் கொஞ்சம் களைந்து கொண்டு, அடிப்படையிலே என்ன வகைவான உணர்வு நமக்குத் தேவை என்பதைச் சிந்தித்துக் கொண்டு அதை நாம் வலுவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்!

அடுத்தது, 'அறிவு மனம் வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி! இங்கே உட்கார்ந்திருக்கிற வரைக்கும் இந்தக் கூட்டத்திலே மிகவும் தூய்மையாக இருக்கிறது; இது ஒரு பொதுக் கூட்டம், அரசுக் கட்டமாக இருக்கிறதனாலே! இது ஒரு தனியாருடைய திருமண மண்டபமாக இருந்தால், இந்தச் சுவரிலே எல்லாருடைய வாழ்க்கை வரலாறும், தீட்டப்பட்டிருக்கும்! யாருடைய வாழ்க்கை வரலாறு? சிவன் வாழ்க்கை வரலாறு; இந்தப் பக்கம் முருகன் வாழ்க்கை வரலாறு: அந்தப் பக்கம் திருமால் வாழ்க்கை வரலாறு. அவன் எப்படிப் பிறந்தான், எப்படிக் காதலித்தான், எப்படி மணம் செய்து கொண்டான்—திருமண மண்டபமாக அது இருக்காது! இந்த நாட்டிலே அறிவு எப்படி வளரும்?

சரி தொலைந்து போகட்டும்! மூட நம்பிக்கைகள் ஒருபுறம்! — இன்னொரு பக்கத்திலே. அருவருப்பான கலை வளர்ச்சி! எவ்வளவு அருவருப்பான கலை வளர்ச்சி! எவ்வளவு அருவருப்பு! அவன் அவனுடைய மனைவியை அங்கே உருவத்திலே, அங்கே தெருவிலே கொஞ்சம் நேரம் நிறுத்தி வைப்பானா? அந்தப் படங்களைப் பார்க்க வேண்டும்! அந்தப்

(7-ஆம் பக்கம் பார்க்க)

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்
உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு
சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்
தொகுதி 1 1-5-83 இதழ் எண் : 17 — பகுதி 27

ஆளுங்கட்சியும் தலைமை இடமும் எதிர்க்கட்சிகளை மதிக்கவேண்டும்!

தமிழகத்தில் ஆளுங்கட்சியாக உள்ள அ.தி.மு.க. வினர் எப்பொழுதுமே எதிர்க்கட்சியினரை எதிரிக்கட்சியினராகவே எண்ணியும் எடுத்தெறிந்து பேசியுமே வருகின்றனர். இந்நிலை அவர்களின் அறியாமையையும், அகங்காரத்தையும், அச்சத்தையுமே காட்டுகின்றது. மேலும் பண்புக்குறைவான இச் செயலால் அவர்கள் நல்ல தன்மைகளையும் மக்கள் ஐயுறவேண்டியுள்ளது.

பள்ளிக் குழந்தைகளின் பகலுணவுத்திட்டம், திருச்செந்தூர் கோயில் அறங்காவலர் சுப்பிரமணியனார் கொலை, குழந்தைவேலு கலைஞரைத் தமிழரல்லர் என்று பண்புக்குறைவாக இழித்தும பழித்தும் பேசியது, கலைஞர் 100 குறுக்கம் (ஏக்கர்) நிலம் வாங்கினார் என்று குற்றம் சாட்டிப் பின் குற்றத்தை மெய்ப்பிக்கத் தவறியதோடு மட்டுமின்றி, அதிகாரத்தையும் தவறாகப் பயன்படுத்தித் தில்லுமல்லு செய்தது, மின்சாரம், குடிநீர்த் தட்டுப்பாடு, நுழைவுவரி எதிர்ப்பு, கலைஞரைக் காவல் அதிகாரி கையைப் பிடித்து முறுக்கிய பண்பற்ற செயல், இக்கால் கிருட்டிண ஆற்று நீர்த் திட்டத்தில் உள்ள ஏமாளித்தனத்தை எடுத்துக் காட்டியது முதலிய பலவேறு நிலைகளில் ஆளுங்கட்சியும் முதலமைச்சர் ம.கோ. இராமச்சந்திரன் அவர்களும், எதிர்க்கட்சிக்காரர்களையும், குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவராகிய கலைஞரையும் அவர்கள் என்ன கருத்துகளை முன்வைக்கின்றார்கள் என்றே கவலைப்படாமல், அனைத்தையும் ஒட்டுமொத்தமாக மறுப்பதும், அகங்காரமாய் விடை சொல்வதும் தமிழ்நாட்டில் நாகரிகமானதும் நலம் மிக்கதுமான அரசியல் நடைபெறவில்லை என்பதற்குப் போதிய சான்றுகளாகும்.

குடியரசு அமைப்பில் எதிர்க்கட்சிகள் ஒரு முகாமையான தகுதியைப் பெறவேண்டியது இன்றியமையாததாகும். இன்னுஞ் சொன்னால், எதிர்க்கட்சிகளின் கவனமான செயற்பாடுகள்தாம் குடியரசாட்சியமைப்பையே பெருமைப்படுத்துவனவாகும். எதிர்க்கட்சிகள் விழிப்பற்றிருந்தால் அது குடியரசமைப்புக்கே கேடுதருவதாகும். அக்கால் அது குடியரசாகவே இயங்கமுடியாது. முடியரசைவிடக் கேடும் தரும் கொள்ளைக்கூட்ட ஆட்சியாகவே அமைந்து விடும். எனவே எதிர்க்கட்சிகளை ஆளுங்கட்சி எதிரிக்கட்சிகளாகக் கருதிவிடாமல், தனக்குற்ற ஒரு தோழமைக் கட்சியாகவே மதித்துப் போற்றிக்கொள்ளும் பண்போடு நடந்துகொள்ள வேண்டும்.

ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், எதிர்க்கட்சியை ஆளுங்கட்சி அரசியல் நடைமுறையில் மதித்ததாக வரலாறே கிடையாது. ஆளுங்கட்சியில் உள்ள முதல் அமைச்சர்க்கு எத்துணைப் பெருமை உண்டோ, அத்துணைப் பெருமையும் எதிர்க்கட்சித் தலைவர்க்கும் உண்டு. முன்னது **நேர்மின்னாற்றல்** (Positive Current) என்றால், இரண்டாவது அஃதாவது எதிர்க்கட்சியானது **எதிர்மின்னாற்றல்** (Negative Current) என்று கொள்ள வேண்டும். இரண்டு ஆற்றலின் இயக்கங்களும் சீராக இருந்தால்தான் மின்சார ஓட்டம் என்கிற அரசியல் இயக்கம் ஒளிதரக் கூடியதாக இருக்கும். இரண்டு கட்சிகளும் கருத்தளவில் ஒன்றுபட்டு இயங்கினால்தான் ஓர் அரசு செயலளவில் மக்களுக்கு நன்கு பயன்பட முடியும்.

எதிர்க்கட்சி கூறுவது அல்லது திருத்தம் கூறுவது எதுவானாலும், அதை மறுப்பதும் அல்லது முறியடிப்பதுமே ஆளுங்கட்சியின் கொள்கை அல்லது வெற்றி என்று கருதிவிடக்கூடாது. அப்படிப்பட்டது குருட்டுக் கொள்கையாகவும், தன்னல வெறியாகவுமே இருக்க முடியும். ஒரு குடியரசமைப்பில், ஆளுங்கட்சி பெரும்பான்மை வலிவு பெறுவதென்பதே ஆட்சி முறைக்கு நலம் பயப்பதாகாது. ஆனால், இப்பொழுதுள்ள தேர்தல் முறையின் குறைபாட்டினால், ஒரு கட்சி எந்த வகையிலேனும் மிகப் பெரும்பான்மை பெற்றுவிட முடிகிறது. இப்படிப்பட்ட நிலையே அரசுக்கு நல்லதன்று.

உலகம் வாழ் தொழிலாளர் ஒன்றுபடும் நன்னாள்!

எடுப்பு

உலகம்வாழ் தொழிலாளர்
ஒன்றுபடும் நன்னாள்!
இலகுபெரு மேநாள்!
எல்லார்க்கும் பொன்னாள்! (உலகம் வாழ்)

தொடுப்பு

விலகிற்று வல்லடிமை!
விளங்கியதே ஒருமை!
வெற்றிபெறத் தொடங்கியதே
உழைப்பாளர் உரிமை! (உலகம் வாழ்)

முடிப்பு

வெயர்வைக்கடல் பொங்கிற்று!
வெடித்ததடா புரட்சி!
விழ்ந்ததடா மாய்ந்ததடா
முதலாளர் திரட்சி!
அயர்வென்ப தில்லையினி;
ஆர்த்ததுமு ழக்கம்!
அகன்றபெரும் உலகம்,இனி
உழைப்பாளர் பக்கம்! (உலகம் வாழ்)
பாடுபடும் கைகளெல்லாம்
இணைந்தன,காண் ஒன்றாய்!
பாட்டாளர் உழைப்பெல்லாம்
விளைந்தன,நெல் குன்றாய்!
மேடுபள்ளம் தூர்ந்ததினி!
வெளுத்ததடா சாயம்!
மேலோங்கி வளர்ந்ததுகாண்!
பொதுமைக்குழு காயம்! (உலகம் வாழ்)
அடிமைத்தீ அவிந்ததடா!
முதலாளர் ஆட்சி
அகன்றதடா; எழுந்ததடா
தொழிலாளர் மாட்சி!
குடிமைநலம் சிறந்ததுகாண்!
உழைப்பாளர் கூட்டம்
கூடினகாண்! பாடினகாண்!
குவிந்ததடா ஈட்டம்! (உலகம் வாழ்)
நீல்வானம் செங்கதிரால்
சிவந்தது,பார் எங்கும்!
நிலமெல்லாம் தொழிலாளர்
புரட்சிஇனிப் பொங்கும்!
மேல்கீழாம் வேற்றுமைகள்
அகன்றனபார்! இன்பம்,
மேம்பட்டு வளர்ந்ததடா!
இல்லையினித் துன்பம்! (உலகம் வாழ்)

தவறான அலலது இழிவான தேர்தல் நடைமுறைகளால், ஒரு கட்சி மிகப் பெரும்பான்மை பெற்று ஆட்சியைக் கைப்பற்றி விடுவதற்கு, இங்குள்ள சட்டதிட்டங்களும் பொதுமக்களின் அறியாமையும் வாய்ப்பாக அமைந்து விடுகின்றன. ஆனால், இது நல்ல அரசியலை நடத்துவதற்கு உதவுவதில்லை நல்ல, அல்லது வல்லாண்மை இல்லாத ஆட்சியமைப்பே குடியரசு முறைக்கு முழுப்பயனையும் தந்துவிட முடியாது. எந்த ஓர் ஆட்சியில் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஓரளவு ஏற்றத்தாழ்வான எண்ணிக்கையுள்ள இடங்களைப் பெறுகின்றனவோ, அந்த ஆட்சியிலேயே மக்கள் நலமடைவதற்கான திட்டங்களைச் சரியாக வடிவமைக்க முடியும். ஆளுங்கட்சி **பெரும்பான்மை** பெற்றிருக்கலாமே தவிர, **மிகப்பெரும்பான்மை** பெற்றிருக்கவே கூடாது. ஓர் அரசியல் கட்சி மிகப்பெரும்பான்மை பெற்று ஆட்சியமைப்பது முடியரசமைப்பின் மறு வடிவமாக இருக்கமுடியுமே தவிர, குடியரசமைப்பின் சரியான வடிவமாக இருக்க முடியாது. இவ்வாறின்றிக் குடியரசமைப்பு சரியாக இருந்து, நெறியாக இயங்கி, முறையாக மக்கள் நலம் கருதவேண்டுமாயின், தேர்தல் நெறிமுறைகளும் ஆட்சியைத் தேர்ந்தெடுக்கும் பொதுமக்களின் அரசியல் அறிவும் திருத்தமுறுதல் வேண்டும். ஆனால் இந்தத் திருத்தமும்கூட, ஓர் அரசியல் கட்சி மிகப் பெரும்பான்மை பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளும் வரை, இயலாததொன்றாகவே போய் விடும். ஏனெனில், மிகப் பெரும்பான்மை பெறும் எந்த அரசியல் கட்சியும் இவ்வாய்ப்பைக் கெடுத்துக்கொள்ள விரும்பாது. அஃதாவது, அடுத்து வரும் தேர்தலில், தன் கட்சி மிகப்பெரும்பான்மை பெறுவதற்கு வாய்ப்பில்லாமற் போகும்படி, தேர்தல் நெறிமுறைகளில் உள்ள ஓட்டை உடைசல்களை அடைக்கவோ, மக்கள் அறிவு பெறவேண்டும் என்று எண்ணவோ விரும்பாது. மாறாக, மக்கள் போதிய விழிப்புணர்வு பெற்றுவிடக் கூடாது என்றே எண்ணும். இப்பொழுதுள்ள இந்திராக்கட்சியின்–தமிழகத்திலுள்ள அ.தி.மு.க. வின்- விருப்பமும் கூட இதுவாகவே இருக்க முடியும். இவ்விரண்டு நடுவண், மாநிலக் கட்சிகளும் தங்கள் தங்கள் எதிர்க்கட்சிகளை மதிக்காத தன்மையே இதை மெய்ப்பிக்கிறது. இந்த நிலை மிகக் கொடுமையான நிலையாகும். என்ன செய்வது? **'பேய் ஆட்சி செய்தால் பிணந்தின்னும் சட்டங்கள்'** என்ற பழமொழி இன்றும் நடைமுறையாக உள்ளதே! இந்த நிலை மாறும்வரை, அல்லது மாற்றப்படும்வரை எதிர்க்கட்சிகளை மதிக்காத ஆளுங்கட்சிகள் இருந்தேதான் தீரும். மக்கள் விழிப்படைவது எப்பொழுதோ அப்பொழுது தான் இந்த நிலை மாறும். அதுவரை தட்டிக் கேட்க ஆளில்லாத தம்பிகளின் 'சண்டப்பிரசண்ட' ஆட்சிதான் இங்கு நடைபெற முடியும். பொறுத்திருந்து பார்ப்போம்.

ஓர் அன்புள்ளத்தின் அரவணைப்பு :

நல்ல இயக்கத்திற்குத் துணையாக ஓரிருவரே வருவர்!

பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கம்.

இக்கிழமை 'தமிழ்நிலத்'தில் தாங்கள் மனந்திறந்து எழுதிய மடல் என்னை வாட்டியது. தமிழன் எவ்வெவற்றிற்கெல்லாமோ பணத்தை வாரி இறைக்கின்றான். ஆனால் உண்மையான தமிழன் நலம் நாடும் இதழ் வளர்ச்சிக்குத் துணை செய்கின்றானில்லை. வெறும் புகழ்ச்சியும் வெற்று ஆரவாரங்களும் நிறைந்துள்ள இந்தத் தமிழ் உலகில் உங்களைப் போன்றோரைப் புரக்கும் எண்ணம் யாருக்குத்தான் வரும்? துணை செய்யவேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் உள்ளவர்க்கு உண்மையில் பொருள் வலிமை இல்லை. என்றாகிலும் உடல் உழைப்பையாவது நல்கலாம். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று உங்கள் உடல் வலிமை உள்ள வரையும் உயிர் இங்கு உள்ளவும் இத்தமிழ்க் குமுகத்திற்கு உழைப்பீர்கள்: ஓடாய்த் தேய்வீர்கள். இன்றுள்ள நிலையில் நீங்கள் ஒருவர்தாம் உலகெங்கிலுமுள்ள அடிமைத் தமிழர்களின் தளையை அறுக்க வந்த தலைமை அரிமா. எனவே உங்கள் உடலில் கவனம் செலுத்துங்கள். தமிழுக்காக, இனத்திற்காக உழைப்பவர்கள் இயற்கையாலும் பறிக்கப்படும் பொழுது உங்கள் உயிர் எவ்வளவு முகாமை வாய்ந்தது என்பது உண்மைத் தமிழ் நெஞ்சங்கட்குப் புரியும். எனவே உடலில் கவனம் செலுத்தி உணவு, துயில் இவற்றில் எச்சரிக்கையாக இருங்கள். உழைக்கும் தமிழ் மக்கள் இன்றில்லாவிட்டாலும் நாளை தங்கள் மடிமையை அகற்றி மாறாத உணர்ச்சி கொண்டு வீறுபெற்று எழுவர். அப்போது தெரியும் உங்கள் உழைப்பின் பெருமை. உங்கள் எண்ணம் ஈடேறும்.

'எண்ணிய எண்ணியாங்
கெய்துப எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்.

என்னால் இயன்ற அளவு தமிழ்நில வளர்ச்சிக்கு உதவுவேன். அது என் கடமையும் கூட. வெறும் பொய்யுரைகளாலும் போலிப் புகழ்ச்சிகளாலும் பயனில்லை. அதற்கு மருளும் ஆளில்லை நீங்கள். அப்படி மருண்டால் இன்று பல அடுக்கு எழில் மனைகள் உங்கட்குச் சொந்தமாகியிருக்கும். பொருளிலார்க் கிவ்வுலகம் இல்லைதான். இருந்தாலும் பொருள் ஒன்றை மட்டுமே வாணாள் குறியாகக் கொள்ளின் நாளை அது நம்முடன் வராது. எல்லாம் தெரிந்தவர் தாங்கள். நல்ல இயக்கத்திற்குத் துணை வருவார் ஓரிருவரே. அதுவே நாளை ஒரு பெரும் படையாக அமையும் என்பது உறுதி.

— மெய். அருண்மொழியன்.
தலைவர். உ.த.மு.க. முகவை வட்டம்.

பார்ப்பனர்கள் தமிழினத்தைத் தாழ்த்துவதற்குப் பயன்படுத்தும் கருவிகள் இரண்டு: ஒன்று மதம்; இரண்டு கலை.

பொதுவுடைமையா, பொதுவுரிமையா?

— பொதுத்தொண்டன் —

'தமிழ்நிலம்' — இதழ் எண்: 16-இல் வித்துவான் தே. வே. சந்தானம் அவர்களின் 'தமிழ்நிலப்' பார்வை ஏளவில் சரியானதாயினும், பொதுவுடைமை, பொது வுரிமைத் தொடர்பான அன்னாரின் பார்வை சரியான தன்று என்பதை அவருக்கும் அவர் கருத்தொட்டிய இயக்கத்தினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழின அழிவு இன்ன வகையிலானது என்று எடுத்துக்கூற முடியாதது. வெளிப்படையான அழிவு களைக் காட்டிலும் உள்முகமான அழிவுகள் தமிழினத் திற்கு நிறைய உண்டு. வெளிப்புற அழிவு தமிழகத் தில் உள்ள தமிழர்களுக்கு மட்டும் இன்னல் விளைவிக்கு மானால், உள்முகமான அழிவு தமிழன் எங்கெங்கு இருக்கிறானோ அங்கெல்லாம் அவனை அடிமைப்படுத்தி வருகிறது.

அந்த அளவு உள்முக அழிவுகளைக் கண்டுகொள் ளும் திறனைத் தமிழன் படிப்படியாக இழந்துபோன நிலையை எண்ணி, இப்பொழுது அந்நிலைகளை உணரும் தமிழர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது!

தமிழனின் உள்முக அழிவுக்கு முழுக்க முழுக்கப் பார்ப்பனியமே காரணம் என்று சொல்லிவிட முடியாது; எண்பது விழுக்காடு பார்ப்பனியமும், எஞ்சிய இருபது விழுக்காடு தமிழனுமே காரணம் ஆவான். தமிழ் அரசர்கள் தம்மினத்தையே மதியாமல், பார்ப்பனிய இனத்தாரை மதித்துத் தம் அரசுப் பொறுப்புகளில் அமர்த்தியதும், குடியாட்சி இன்றி முடியாட்சி நடத்தி யதும், மக்களிடையில் பொருளியல் நிலையில் பொதுமை ஏற்படுத்தாததுமே தமிழன் தமக்குத்தாமே ஏற்படுத்திக்கொண்ட எஞ்சிய இருபது விழுக்காடு உள் அழிவுகள்!

பழைய நிலைகள் இப்படியாக இருந்த நிலையில் இப்பொழுதைய அடிமைச் சூழலில் எந்தச் சிக்கலை முதலில் அவிழ்ப்பது, எதன் வழி படிப்படியாகத் தமிழன் விடுதலை பெறுவது, தமிழினம் உரிமை பெறுவது, தமிழ்மக்கள் பொருளியல் மேன்மை அடை வது என்பதை ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு கோணத்தில் ஆராய்ந்து, அவரவர்களுக்குத் தெரிந்த வகையில் மாற்றங்கள் நிகழ்த்தி வந்ததை நாம் அறிவோம்.

இந்நிலைகளுக்குப்பின் அவரவர்கள் எடுத்துக் கொண்ட நிலையில் தமிழினம் உய்வுற்றதா? சமவுரிமை கிடைத்ததா? தூயதமிழ் வளர்ந்ததா? பொதுவுடைமை பிறந்ததா? — எண்ணிப்பார்க்க வேண்டும்.

எல்லாத்துறைகளிலும் முன்பு ஒருநூற்றாண்டுக்கு முன்பிருந்த நிலையைவிட இப்பொழுதைய நிலை சிறிது உயர்ந்துள்ளது, மாறியுள்ளது என்று பார்க்கிற அந்த பொழுதில், அது நிலைக்குமா என்ற கேள்விக்கும் நாம் விடைகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பெரியார் இறந்த பின்பு. அவர் பாடுபட்ட கோணத்தில் — ஒருபாதையில்-சிலர் தொண்டு செய்தா லும், பெரியார் இருந்த நிலையில் காணப்பட்ட இன எழுச்சி, சமவுரிமை அல்லது பொதுவுரிமைத் தொடர் பான உணர்வு இக்கால் உள்ளதா? பெரியார் மறைவுக் குப்பின் அவரின் தொண்டு, பாடுபட்ட உழைப்பு இப்பொழுதே சிறிது மறைந்து போனது என்றால் இன்னும் ஒரு நூறாண்டு கழித்து ......! — சிந்திக்க வேண்டியிருக்கிறது!

சரி, தனித்தமிழ்க் கழகம் என்னும் பெயரில் அமைக்கப்பட்டிருக்கிற சில இயக்கங்கள் வழி நடத்தப் படுகிற மொழிவழிப் போராட்டங்களான — தூயதமிழ் காக்கப்பெறல், தனித்தமிழில் பெயர்ப்பலகை அமைத் தல், தமிழ்மொழியின் சிறப்பைத் தமிழனுக்கு உணர்த் தல் போன்ற பல நிலைகள் எந்த அளவில் வெளியி லிருந்து பார்ப்பவர்களுக்குத் தோன்றுகிறது என்பதை ஒவ்வொருவரும் எண்ணிப்பார்க்க வேண்டும். தனித் தமிழில் மாற்றப்பெற்ற பலகைகள் இன்னும்பத்தாண்டு, இருபதாண்டு போனால் மீண்டும் பழைய நிலைக்கு மாறுமா, மாறாவா?

ஓர் இன வளர்ச்சி நாளுக்குநாள், ஆண்டுக் காண்டு, நூற்றாண்டுக்கு நூற்றாண்டு மாறுபடக் கூடியது. ஆனாலும், அந்நிலை முழுக்க முழுக்க அவ் வின ஆக்கத்திற்கே பயன்படாவிட்டாலும், பெரும் பகுதியாகவேனும் (தொண்ணூறு விழுக்காடேனும்) இன ஆக்கத்திற்கான வளர்ச்சியாக அமையவேண்டுமே ஒழிய இன அழிவுக்கான வளர்ச்சியாகவோ அல்லது பிறிதோர் இனத்திற்கான வளர்ச்சியாகவோ அமைந்து விடக்கூடாது என்பது இனப்பற்றுள்ள அல்லது அக் கறையுள்ள ஒவ்வொரு மாந்தனும் எண்ணக்கூடியது.

அடுத்து, பொதுவுடைமைத் தொடர்பாக இக்கால் இயங்கிக்கொண்டிருக்கிற கட்சிகளின் அல்லது மறை முக இயக்கங்களின் போலிமையான அல்லது சரியான கோணத்தில், திட்டமிடப்படாத நிலையில், எந்த அள வில் நம் நிலத்தில் பொதுவுடைமை விதைக்கப் பெற் றுள்ளது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அவர்களின் இனநலம் தழுவாத பொருளியல் கொள் கையும், 'எதார்த்தமான' பூணூலியல் பொருளியலும் நம் இனத்திற்கு முழுக்க முழுக்க மாறான நிலையின வாக இருப்பது உண்மையானாலும், அவர்களின் கொண்டுசெலுத்தம்தான் இந்நிலத்திற்கு ஏற்புடைய தன்றே தவிர, அல்லது இந்நிலத்துள் விதைக்கப்பெற முடியாததே தவிர, பொருளியல் சமவுணர்வு அல்லது பொதுவுடைமை அரசியல் அமைப்பு இந்நிலத்திற்கு இக்கால் தேவையற்றது என்று கூறிவிட முடியாது.

ஆக, நம் நிலம் விடிவுபெற, நம்மினம் தலை நிமிர்ந்து நடக்க, விடுதலைபெறப் பொதுவுடைமை மாற் றம் தேவையா? சாதி, மத வேறுபாடற்ற பொதுவுரிமை மாற்றம் தேவையா? இன, நாட்டு விடிவு நிலைகளுக்கு அடிப்படையான மொழி விடிவு தேவையா?

— இங்கு ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது.

ஏதாவது ஒன்றுமட்டும்தான் தேவையென்றிருந் தால், மற்றவற்றைப் பார்ப்பனியம் ஆளுமை செய்தி ருக்கத் தேவையில்லை — காட்டாக, பொருளியல் மாற்றத் தினால் இந்த இனம் உருப்பட்டுவிட வாய்ப்பு இருக்கு மானால் பார்ப்பனியம் இன நிலையிலும், மொழிநிலையிலும் செய்கிற அழிவைக் காட்டிலும் பொதுவுடைமை இந் நிலத்தில் பிறக்காமலிருக்க என்ன வகையில் ஆளுமை செய்ய வேண்டுமோ, அந்நிலையில் மட்டும் ஆளுமை செய்திருக்கும் அல்லது புரையோடிப்போன பொது வுடைமைப் பொருளியலை, இந்நிலத்து மக்களுக்குத் திரித்துக் காட்டி, அது பயனற்றது என நம் தமிழி னம் எண்ணும்படி செய்திருக்கும்.

ஆனால் பார்ப்பனியத்தின் ஆளுமை, அதனின் அழிப்பு முயற்சி பொருளியலிலோ, அரசியலிலோ மட்டும் நின்றுவிடாமல், இன நிலையிலும், மொழிநிலை யிலும் பொதுவுடைமைத் தொடர்பாக எந்த அளவில் ஆழமாக வேரூன்றி அடியிலிருந்தே குழி தோண்டப் பெற்றதோ, அதைவிட அதிகமாகவே அடியிலிருந்து குழிதோண்டி, இனத்தையும், மொழியையும் அழித்துப் படுகுழிக்குள் தள்ளிய உள்முகமான பெரும் அழிவுகள் எந்த நிலையிலும் தமிழினத்தைத் தனித்து விழிப்புறச் செய்துவிட முடியாதபடியுள்ளன.

இன நிலையில் விழிப்புற்ற தமிழன் எங்கு இருக் கிறான்? நாமெல்லாம் தமிழர்கள்தாம்! சாதி மத நிலை களை அறுத்தெறிந்து போடவேண்டும் என்று இத் தனைக் காலத்திற்குப் பிறகு போராட எழுகிற நேரத் தில் — நம் தமிழர்கள்- அடிமைச் சகதியிலே ஊறிக் கொண்டிருந்த தமிழர்கள்-குடிக்கக் கூழின்றி, உடுக்க உடையின்றித் தமிழரையே இடைத் தரகராக வைத் துப் பார்ப்பனியம் செய்யும் ஆளுமையில் ஏழ்மையுற்று வாடி வதங்கும் நிலைக்கும் சேர்த்து, நாம் விடிவுகாண வேண்டியுள்ள அதேபொழுது உலக மூல மொழியான நம் தாய்மொழி, தமிழ் புறக்கணிக்கப்பட்டுச் சமற்கிரு தம் தலைதூக்கி வெறியாட்டம் போடுவதைப் பார்த்த பின் அல்லது கண்டுணர்ந்தபின் உண்மையிலேயே எதைச் சரிசெய்வது, முதலில் எதைச் செய்வது என்று பொறுமையோடு எண்ண இயலாமல், பொறுமைக்கே வழியில்லாமல் விரைவுகொண்டு, விடிவை நோக்கி நடையிடுகிறோம்.

அதற்குள் உட்பூசல் — நான்தான் சரி, நீ தவறு என்பதாகப் போராட்டம்! கடைசியில் நம்மை நிலைப் படுத்துவது பார்ப்பான். பிறகு நம்மைப்பற்றிப் பேசு வதை நிறுத்திவிட்டுப் பார்ப்பான்தான் சரி என்று முடிவு கட்டி அமைந்துவிடும் இழிநிலைகளை எல்லாம் எண்ணிஎண்ணி, அத்தகைய சூடு பட்டுப் பட்டு வெந்து கொண்டிருக்கிற உள்ளங்களாய், அழன்று கொண்டிருக்கிற நெருப்புகளாய் உழன்றுகொண்டும் தாம் சிலர் இருக்கின்றனர்.

— யாரால் என்ன பயன்?

— தமிழினம் எப்பொழுதுதான் விடிவுபெறும்?
பெறுமா, பெறாதா?
விளங்காத புதிராக, இன்றுவரை
உள்ளத்தைப் பிழிந்து கொண்டிருக்கும்
இக் கேள்விக் கணைகளுக்கு விடையைத்
தேடிப் புறப்படும் இளைஞர்கள் ....
தீவிர நிலையில் சேர்ந்து ....

பயனில்லைதான் — ஆனாலும் ஏதாவது நம்மால் முடிந்தது என்று முடித்துக்கொண்டிருக்கும் நிலைகளை யும் மேற்கூறிய பொதுவுடைமைக் கட்சிகளின் செயல் களுக்குள்ளேதான் அடக்க வேண்டும்.

ஆக எப்படித் தமிழினம் முன்னேறும், விடிவு பெறும்? —

பொதுவுடைமைப் பொருளியலையும், இனவிழிப்பு நிலைகளையும் (சாதி! மத இழிவு அழிப்பு நிலைகளையும்) ஒன்றுசேரக் கூட்டி அனைத்து ஏழை, எளிய, பொது மக்களுக்கும் பிறமொழி கலவாத தூயதமிழில் ஊட்டி அவர்களை உயிர்ப்பித்து எழுப்பும் ஓர் இயக்கம்தான் வெற்றிபெறும், அல்லது அப்போக்குத்தான் வெற்றி யைத் தரும்; மற்ற அனைத்து நிலைகளும் கால ஓட்டத் தில் அடித்துச் செல்லப்பெறும்.

இன விழிப்பையும், பொதுவுடைமை அரசியலை யும் அமைப்பதற்கு முன்பாக மொழியைத் தூய்மைப் படுத்த வேண்டும் என்றோ, மொழியின் இன்றியமை யாமையை மக்களுக்கு உணர்த்த வேண்டுமென்றோ மொழியின் மூத்த நிலையை உலகுக்குச் சுட்டிக்காட்டிச் சமற்கிருதத்தின் போலியாளுமையை நிறுத்தி, உலக அரங்கில் தமிழுக்கு முதலிடம் கொடுக்க எண்ணு வதோ, மொழி வழிச் சிறந்த அறிவாக்கங்கள் செய்ய எண்ணுவதோ, மேலும் பார்ப்பனியத்திற்கு ஆக்கமே யொழிய, அல்லது அப்படிச் செய்த அடுத்த பத்தாண்டு களிலே மீண்டும் மறைக்கப்பெற்றுப் பார்ப்பனியம் அந்த அந்த வழிகளில் இன்னும் வேரூன்றி நிலைநிறுத் தப் பெற்றுத் தமிழினத்திற்கு அழிவைத்தான் தேடித் தருமேயொழிய தமிழோ, தமிழினமோ, தமிழினத்தின் அரசியலோ உயர்வுபெற வழியே இராது.

அதேபோன்று இன நிலையில் மட்டும், பொதுவுரி மைதான் முதலில் வேண்டும், பின் பொதுவுடைமை விதைக்கப்படும் என்பது மொழிமுன்னேற்றமபோன்றே ஒரு முதலாளியச் சிந்தனையாகும். அடிமைநிலை யில் வாடி வதங்கும் எத்தனையோ கொத்தடிமைகள் உண்ண உணவின்றிக் காய்ந்து கருகிக் கொண்டிருப் பவர்களிடம் இனம், நாடு என்ற சொற்கள் எப்படி எடுபடும்? அவர்களின் அடிநிலைத் தேவையே நிறை வேற்றப்படாதபொழுது எப்படி அவர்களின் இனத் தைக் காக்க எண்ணுவர்? அவர்களின் மானத்தைக் காக்கத் துணியில்லாத நிலையில் இனமானத்தைப் பற்றி அவர்களுக்கு என்ன கவலை?

அதேநிலையில், இனஉணர்வு தழுவாத பொதுவுடை மையும் தமிழின மக்களுக்குப் பயன்தராது. இன உணர்வு தழுவாத பொதுவுடைமை என்பது இந்தியப் பெருநிலத்திற்குப் பொதுவானது என்று தேசியம் பேசும் பொதுவுடைமையர்கள் தாமே பொதுவுடைமை யைக் கொண்டுவருவர்; அதனால் தேசிய நீரோட்டத் தில் தமிழ்நிலம் அழிக்கப்படுமே ஒழிய, எப்படிக் காக் கப்பெறும்? — தமிழ் எப்படி உலக முதுமொழி என ஒரே தேசியத்தில் உள்ள சமற்கிருதத்தை எதிர்த்துப் போராட முடியும்? பூணூல் அணியப்பெற்ற இந்திய தேசியப் பொதுவுடைமை நாடல்லவா அமைக்கப்படும்! 'தோழர்கள்' சிந்திக்க வேண்டும்!

அதனால், மொழிவழியோ, இனவழியோ, அரசியல் வழியோ தனித்தனியே தமிழினத்திற்கான விடிவை ஏற்படுத்திவிட முடியாது! மூன்று முயற்சிகளும் ஒன்று சேர இருந்தால்தான் பயன் அளிக்கும். பொதுவுரிமை தான் முதல், பொதுவுடைமை பின்னர் என்பதில் ஐயம் சிலருக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் அடையா ளம் காட்டப்பெற முடியாத அளவிற்கு அவர்கள் ஆழக் குழிக்குள் சிதைவுற்றுத்திரிபுற்றுத்திரியும் நாள் நெடுந் தொலைவில் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறோம்

கூவாய் கோட்டுக் குயிலே!

ஆ! ஆ! எந்தமிழ் ஆட்சி அமைத்திட
ஆண்களும் பெணகளும் அணிதிரண் டெழுந்தனர்!
மூவாத் தமிழின மொய்ம்பினைக் காத்திட
மூத்தோர் நரம்பும் முறுக்கே றியதே!
நாவால் விடுதலை நச்சியோ ரெல்லாம்
நாடுமீட் கும்படை நடத்திட வந்தனர்!
கூவாய் கோட்டுக் குயிலே தமிழ்நிலம்
கொண்டனர் பொதுமை கொண்டன ரென்று!

சங்குகள் ஊதின தாரைகள் அதிர்ந்தன
தங்கையர் தாயா தமக்கையர் தண்டமிழ்
மங்கையர் கூட மறப்புலி யாகினர்.
மாற்றார் தலைகளை மண்ணில் உருட்டினர்.
வங்கம் கடந்தவன் வழிகளி னடிமையை
வாள்கொண் டறுத்தனர். வைகைகா விரியோ
பொங்கிய குருதியில் புதுப்புன லாடினர்.
போலியைத தாக்கினர்! பொதுமையை ஆக்கினர்!

'யாதுமூரே யாவரும் கேளிர்'
யாதத தமிழறம யாண்டும் நிலைத்து!
மூதா வீன்ற கன்றுகள் போல
முத்தமிழ மக்கள் வைத்தன ரொற்றுமை!
சாதியே யில்லை சமயமு மில்லை
சட்டநூ லாகத் திருக்குறள் வந்தது
தீதிலாக் காலம் திரும்பிய திங்கே!
தேர்ந்தனர் பொதுமை ஆட்சியில் நின்றே.

— மெய். அருள்மொழியன்.

வடமொழி மந்திரமா? தமிழரை மாய்த்திடும் தந்திரமா?

புலவர். பொதிகைச் செல்வன், பவானி

•(பவானித் திருக்கோயிலில் ஒரு திங்களுக்கு முன்பு பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் அவர்களால் பல இலக்கம் உருபாச் செலவில் வடமொழி மந்திரங்களை ஒருநாளில் 18 மணிநேரம் முழங்கச் செய்து கோடி வழிபாடு நடத்தப்பெற்றதைக் கண்டு வருந்திப் பாடப்பெற்றவை இப்பாடல்கள்.)

அன்னை மொழிவிடுத் தயல்மொழி போற்றுதல்
அடிமை நிலையன்றோ?—நீ
சொன்ன மந்திரம் தமிழரை வீழ்த்திடும்
சூழ்ச்சி வலையன்றோ?

வடமொழி யாலே தமிழர் உயர்ந்திடும்
வாய்ப்பினைப் பெற்றா ரா?—அந்தக்
கெடுமொழி யாலே உலகினில் தமிழர்
கீழ்நிலை யுற்றாரே!

பொல்லா ஆரியம் புகுந்ததால் தமிழ்ப்
பொலிவெலாம் போயினவே!—தவ
வல்லார் அருளிய மறைமொழி எல்லாம்
மறைந்திட லாயினவே!

நந்தமிழ்த் தாயைத் தள்ளிய தாலே
நம்மினம் தாழ்ந்ததுவே!—இங்கு
வந்த ஆரியம் நம்மையே வென்று
வளமுற வாழ்ந்ததுவே!

அருட்பெரும் வள்ளல் வடமொழி மந்திரம்
ஆகா தென்றாரே!—அவர்
விருப்பினைப் பரப்பிடும் பொறுப்பினன் அவர்மொழி
மீறுதல் நன்றாமோ?

பேருடன் ஊரையும் வடமொழி யாக்கிடும்
பேதமை யுற்றோமே!—பழஞ்
சீருடன் சிறப்பையும் இழந்துமே வையகம்
சிரித்திடப் பெற்றோமே!

வடமொழித் தீமையை உணர்ந்தபின் னுங்கொடும்
வடமொழி மந்திரமா?—மக்கள்
திடமொழிந் தின்னுங்கீழ் நிலையுற வஞ்சகர்
செய்திடும் தந்திரமா?

எத்தனை எத்தனைப் பிரிவுகள் இங்கே
இம்மொழி புரிந்ததுவே; எழில்
முத்தமிழ் நாடு முழுவதும் வடதீ
மூண்டே எரிந்ததுவே!

தாயின்பால் இருக்கையில் நாயின்பால் குடித்திடத்
தாவியே ஓடுகிறாய்!—பெற்ற
தாயினைத் தள்ளிநீ பகைவனின் தாயினைத்
தலையில்வைத் தாடுகிறாய்!

இன்னும் வடமொழிக் கிடந்தரின் தமிழே
இல்லா தாய்விடுமே!—புகழ்
மன்னும் தமிழ்மொழி மறைந்திடின் தமிழினம்
மாய்ந்தே போய்விடுமே!

வடமொழி இந்தி தமிழ்த்தாய் உயிரை
மாய்த்திடும் வாள்களன்றோ?—மிகக்
கொடுமொழி அவைதாம் தமிழ்த்தாய் துடித்திடக்
கொட்டிடும் தேள்களன்றோ?

அருச்சனை யாலே ஏழைகள் துயரெலாம்
அகன்றுமே வாழ்வாரோ?—நிதம்
வருந்திடும் துன்பங்கள் மாய்ந்துமே வாழ்க்கையில்
வளமெலாம் சூழ்வாரோ?

தெரியுமா செய்தி?

1. நிலவில் ஏறத்தாழ 30.000 அணைந்த எரிமலைகள் உள்ளன.
2. ஆக்டோபசு என்னும் கடல்வாழ் உயிரிக்கு அதன் தலையைச்சுற்றி 8 கைகள் உள்ளன. இரை ஏதுங்கிடைக்காவிட்டால் தன் கைகளில் ஒன்றையே கடித்துத்தின்று விடும், அப்படிக் கடிக்கப்பட்ட கை மறுபடியும் வளர்ந்துவிடும்.
3. கேரளத்திலுள்ள கோட்டயத்தைச் சேர்ந்த, (1982 திசம்பரில்) 5 அகவை நிரம்பப் பெற்ற கன்னியா என்கிற சிறுமிக்கு வழக்கத்திற்கு மாறாக நெஞ்சாங்குலை வலப்புறம் அமைந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்வகை அமைப்பு 10 இலக்கம் பேரில் ஒருவருக்கு அரிதாக அமையும் வாய்ப்புள்ளதென மருத்துவத் திறலாளர்கள் கருத்தறிவிக்கின்றனர்.
4. நாம் வாழும் இந்நிலவுலகு தோன்றி ஏறத்தாழ 500 கோடி ஆண்டுகளாகின்றன.
5. மிகப் பொருத்தமான ஒருசெய்தி: உலகிலேயே குருடர்கள் மிகுந்தநாடு இந்தியா!

— இளஞ்சேரல் முதுபாண்டியன்.

‘உலாவரும் ஒளிக்கதிர்’ என்னும் பெயரில் சென்னைத் தொலைக்காட்சியில் காஞ்சியாச்சாரியாருக்கு விளம்பரம்!

அண்மையில் சென்னைத் தொலைக்காட்சியில் ‘உலாவரும் ஒளிக்கதிர்’ என்னும் பெயரில் ஒரு நிகழ்ச்சியைத் தொடங்கியிருக்கிறார்கள். இதில் சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நடைபெறும் சில விழா நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார்கள்.

இதைச் சாக்காகப் பயன்படுத்திக் கொண்டு, சென்னையில் கடந்த சில] கிழமைகளாக, இந்துமதத்தையும் பார்ப்பனியத்தையும் விரைந்து பரப்புவதற்காகத் திட்டமிட்டுத் தங்கிவரும் காஞ்சியாச்சாரியார் சின்னப் பெரியவாளுக்குக் கொழுத்த விளம்பரத்தைத் தருகிறார்கள், சென்னைத் தொலைக்காட்சியில் பேராளுமை பெற்றப் பார்ப்பன அதிகாரிகள்!

இடையிடையே கண்துடைப்புக்காக ஓரிரண்டு கிறித்தவ, இசுலாமிய மத நிகழ்ச்சிகளும், சில பொது நிகழ்ச்சிகளும் காட்டப்பெற்றாலும், ஒரு தொடரில், காஞ்சி ஆச்சாரியார் நிகழ்ச்சியைமட்டும் மூன்று நான்காக, அதுவும் அவரையே சுற்றிச் சுற்றி வளைத்துக் காட்டப்படுவது எவ்வளவு கொடுமை!

மேலும் இந்த நிகழ்ச்சிகளில் முழுவதும் மதவிழாக்களையே காட்டுவானேன்? வேறு பொது நிகழ்ச்சிகளே, அதுவும் தமிழ் சார்பான அறிவியல் சார்பான நிகழ்ச்சிகளே நடைபெறுவதில்லையா? அவ்வாறு அவற்றைக் காட்டினாலும் அதிலும் பார்ப்பன சார்பான நிகழ்ச்சிகளாகவே தேர்ந்து போடப்படுகின்றன.

பார்ப்பனியம் தமக்கு வாய்ப்பாக எந்த அரசுத்துறை அமைந்தாலும், அதை எப்படித் தன் மத நலனுக்கும் இன நலனுக்கும் பயன்படுத்திக் கொள்கின்றது என்பதைத் தன்மானமற்ற தமிழதிகாரிகள் உணர வேண்டும். தங்கள் வயிறு கழுவுவதையே பெரிதாகக் கருதும் மானமற்ற இவர்கள் எங்கே இதை உணரப் போகிறார்கள்?

— ‘ஈட்டி’

தமிழ்ப் புலியே விழித்தெழுவாய்!

— தமிழவேள் —

நலமின்றி நலிவுற்று நாடோடிக் கூலிகளாய்
நாடிழந்து வீடிழந்தே உரிமையெலாம் உடனிழந்தே
உலகெங்கும் உன்னினம்தான் உருக்குலைந்து போகிறதே!
உறங்கியது போதாதோ? தமிழ்ப்புலியே
விழித்தெழுவாய்!

பெருந்துன்பப் பட்டுழைப்ப(து) உன்னினமே என்றாலும்
புதுமணல் கோபுரம்போல் கரையான்கள்
புற்றெடுக்கக்
கருநாகம் உட்புகுந்த கதையினைப்போல் ஆகிறதே!
கண்மூடித் தூங்காதே! தமிழ்ப்புலியே விழித்தெழுவாய்!

ஒளியறியா இருட்டறையின் உள்நுழைந்தே தடுமாறும்
ஒருபறவை தனையொப்பப் பகுத்தறிவில் பொய்மயக்கில்
தெளிவின்றிப் பகைவர்கைப் பாவையென
உன்னினந்தான்
தத்தளித்துத் தவிக்கிறதே! தமிழ்ப்புலியே
விழித்தெழுவாய்!

தேன்சுவைக்கச் சென்றழியும் சிற்றெறும்புக்
கூட்டம்போல்
திரைப்படத்தைக் காண்பதிலே தீராத வேட்கையுடன்
மேன்மையுறும் பண்பின்றி மடிகிறதே உன்னினம்தான்!
மடைதிறந்து திருப்பிவிடத் தமிழ்ப்புலியே
விழித்தெழுவாய்!

நடுநிலையை நேர்மையினை உண்மையினை ஒழுக்கத்தை
நல்லறத்தை இரக்கத்தை இறையதுவே முன்வந்து
விடுகவெனச் சொன்னாலும் விடல்அறியா
உன்னினந்தான்
விட்டுவிடும் போலுளதே! தமிழ்ப்புலியே
விழித்தெழுவாய்!

சூடுமின்றிச் சுரணையின்றித் தன்மதிப்பும் சிறிதுமின்றிச்
செக்கிழுக்கும் மாடெனஉன் இனம்இருக்கச்
செறுபகைதான்
ஆடுகின்ற ஆட்டமது அளவிறந்து செல்கிறதே!
அயர்ந்துறங்கல் அழகாமோ? தமிழ்ப்புலியே
விழ்த்தெழிவாய்!

கண்டவற்றைத் தின்றுகொண்டு காடுறைந்த
இனமெல்லாம்
கொடிகட்டி அரசாண்டு மேன்மேலும் முன்னேற,
பண்டிருந்தே நாகரிகப் பண்பாட்டைப் பெற்றவினம்
பின்னடைந்து போகிறதே! தமிழ்ப்புலியே
விழித்தெழுவாய்!

பாரெங்கும் உன்னினத்தார் பரவியுளர் என்றாலும்
பைந்தமிழைப் புறக்கணித்துப் பிறமொழியே
போற்றுகிறார்!
ஊரெங்கும் நாட்டெங்கும் உரிமையுடன் முதலிடத்தை
உன்மொழிதான் பெறவிலையே! தமிழ்ப்புலியே
விழித்தெழுவாய்!

எத்தனையோ ஆயிரமாம் ஆண்டுகள்உன்
தாய்மொழிதான்
ஏற்றமுடன் ஆட்சியிலே இருந்துவந்த தென்றாலும்
செத்தமொழி பெறுகின்ற சிறப்புக்கும் வழியின்றிச்
சிறுமையுடன் வாழ்கிறதே! தமிழ்ப்புலியே
விழித்தெழுவாய்!

உன்மொழியை அழித்துவிடில் உன்னினத்தை
மிகவெளிதில்
உருக்குலைத்து வீழ்த்திடலாம் என்றெண்ணி உன்பகைவர்
என்னென்ன வகையெல்லாம் இடர்செய்து வருகின்றார்!
இன்னும் நீதூங்குவதா? தமிழ்ப்புலியே விழித்தெழுவாய்!

120 கோடி உணவுப் பொருள் வீணாவதா?

மக்கள் நல அரசா? மக்கட் பகை அரசா?

இந்தியாவில் உள்ள நடுவண் அரசு என்பது, இத் துணைக் கண்டத்தில் உள்ள தேசிய இனங்களின் உரிமைகளைப் பறிப்பதற்காகவும், அவர்களின் மொழி பண்பாட்டுச் சிறப்புகளை நசுக்குவதற்காகவுமே உள்ளதென்பதை உலகம் நன்கறியும்.

துணைக்கண்டத்தில் வாழும் பல்வேறு இனமக்களும் தரும் வரிப்பணத்தில் மிகப் பெரும்பங்கு நடுவணரசுக்கே சென்று கொண்டிருக்கிறது. வரிப்பணம் தரும் அளவு பயனை அந்தந்த மாநிலங்கள் அடைவதில்லை.

வறட்சியால் துன்பப்படும் பகுதி மக்கள் பயன் அடைவதற்காக எல்லா மாநிலங்களும் நடுவண் அரசு தவசக்கிட்டங்கிக்கு உணவுப் பொருள்களை வழங்கவேண்டும என்பது வழக்கமான நெறி. ஆனால் வறட்சியால் துயர்ப்படும் மாநிலங்கள் சிறு அளவு தவச(தானிய) உதவிபெற வேண்டுமானாலும் தில்லிக்கு நடையாய் நடக்கவேண்டும். ஆள் மாற்றி ஆள் தில்லி சென்று அங்குள்ள காவலர்களுக்கெல்லாம் கால்பிடித்துவிடவேண்டும். பின்னர்தான், அம் மாநிலத்திற்குப் பெரிய வசவும் சிறிய அளவு தவசமும் கிடைக்கும்.

ஆனால், புதுத்தில்லியில் நடுவண் அரசுக் கிட்டங்கியில் சேர்த்து வைக்கப் பெறும் தவசங்கள் என்ன நிலைமைக்கு உள்ளாகின்றன என்பதை அறிந்தால், நெஞ்சம் கொதிக்கும். இந்தக் கிட்டங்கிகள் சரியாகப் பேணப்படுவதில்லை. பல கிட்டங்கிகள் திறந்தவெளிக் கிட்டங்கிகளே, எனவே, மழை, புயல், வெயில் ஆகியவற்றின் தாக்குதலால் தவசங்கள் கெட்டு அழிந்துபோகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளாய் இந்த நிலைமை வளர்ந்து வருகிறதாம். 6.5. இலக்கம் கல்லெடை(டன்) உணவுத் தவசங்கள், 1981-82-இல் மட்டும், இவ்வாறு பாழானது. இந்திய உணவுக் கழகத்திற்கு உரிய இத் தவசங்களின் விலை மதிப்பு உரு 120 (நூற்றிருபது) கோடியாகும். எத்தனைக் கோடி மக்களின் உழைப்பால் இது விளைவிக்கப்பெற்றிருக்கும்!

அதிர்ச்சிதரும் இச்செய்தியைச் சில செய்தித்தாள்கள் மட்டுமே சிறு கட்டத்திற்குள் வெளியிட்டுள்ளன. இந்திய முற்றாளுமை அரசு மக்கள் நல அரசா, மக்கட் பகை அரசா என்பதை இச்செய்தி ஒன்றே தெளிவாக்கும்.

— இரணியன்.

பெரியார் மாவட்டம் உ.த.மு.க. மாநாட்டில்

ஈரோடு வட்டத் தலைவர் புலவர் தி. மு. அரசமாணிக்கனார் அவர்களின் வரவேற்புரை!

(கடந்த 10-4-83-ஆம் பக்கலன்று ஈரோடு பிரப் சாலையில் உள்ள என்.எம்.எசு. கலையரங்கில் நடைபெற்ற பெரியார் மாவட்ட உ.த.மு.க. அமைப்பு மாநாட்டின் தொடக்கத்தில், ஈரோடு வட்டத் தலைவர் புலவர். தி.மு. அரசமாணிக்கனார் மாநாட்டிற்கு வந்திருந்த பேராளர்களையும் தலைவர்களையும் பொதுமக்களையும் வரவேற்று ஆற்றிய உரை இது.)

உலகத் தமிழின முன்னேற்றக்கழகப் பெரியார் மாவட்ட அமைப்பு மாநாட்டின் தலைவர் ஆகிய சழக முதல்வர் அவர்களே! பெரியார் மாவட்ட உ.த.மு.க புரவலர் அவர்களே! அமைப்பாளர் பா. இளங்கோ அவர்களே! பெரியோர்களே, தாய்க்குலமே!

'எங்கே மனம் அச்சமற்றுத் தலை செம்மாந்து நிமிர்கிறதோ, எங்கே அறிவு விடுதலைபெற்று விளங்குகின்றதோ, எங்கே குறுகிய சாதி மதப் பிளவுகளால் உலகம் உடையாமல் ஒன்றுபட்டு நிற்கிறதோ, எங்கே உண்மையின் ஆழத்தினின்று சொற்கள் வெளிப்படுகின்றனவோ, எங்கே விடாமுயற்சியின் கைகள் கொள்கை நோக்கத்தை நிறைவுசெய்ய முனைகின்றனவோ, எங்கே பகுத்தறிவு வெள்ளம் மூடநம்பிக்கைப் பாலைநிலத்தில் பாய்ந்து பாழ்படாமல் இருக்கிறதோ, எங்கே எண்ணம் பரந்து விரியும் சிந்தனையாலும் செயலாலும் வழிநடத்தப்படுகிறதோ, அந்த உரிமைச் சூழ்நிலையில் என் அன்னைநாடு விழித்தெழுவதாக!' என்ற பாவலர் தாகூரின் செஞ்சொற்களுக்கு இலக்கணமாக வீற்றிருக்கும் உலகத்தமிழின முன்னேற்றக்கழகத்தின் முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனா அவர்களே! பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படவிருக்கும் இம் நாள் நடக்கும் பெரியார் மாவட்ட உலகத்தமிழின முன்னேற்றக



புலவர். தி.மு. அரசமாணிக்சனார் வரவேற்புரை ஆற்றுகிறார்!

கழக மாவட்ட அமைப்பு மாநாட்டிற்குத் தலைமை யேற்றிருக்கும் தங்களை வருக, வருக என இருகை கூப்பி வணங்கி வரவேற்கிறோம்.

தங்களை முதல்வராகப் பெற்ற இக்கழகத்தாராகிய நாங்கள், தங்களிடம் தாம்போகும் வழியை மறித்துகொண்டிருந்த ஒரு குன்றத்தைக்குத்திஉடைத்துக்கொண்டிருந்தஇரண்டுதோள்களைக்கண்டோம். தம்மைநோக்கிச் சீறிவருகின்ற நெருப்புமழைக்குச் சிரித்துக்கொண்டிருந்த இரண்டு உதடுகளைக் கண்டோம். தமிழ்நெறி காப்பேன், தமிழரைக் காப்பேன் என்று அறையில் அன்று, மலைபோல் நின்று மெல்ல அன்று, தொண்டைகிழிய முழக்கமிடும் ஒரு இரிடியத்தால் செய்த உள்ளத்தைக் கண்டோம். அதுமட்டும் அன்று; குன்று உடைக்கும் தோளும் நெருப்பு மழைக்குச் சிரித்த உதடுகளும் இரிடிய உள்ளமும ஒரே இடத்தில் கண்டோம். இந்த அணுக்குண்டுப் பட்டறைதான் 'பாவலரேறு' என்பதும் கண்டோம்.

தமிழனின் சரிவுப் படிகளிலெல்லாம் முட்டுக்கொடுத்துக் கால் கடுத்துப்போய் இயற்கை எய்திய தந்தைபெரியார்க்கு ஒப்பத் தமிழினம் காக்க வேறொருவர் இங்குத் தோன்றித்தான் இந்தத் தமிழன் வீறு பெறவேண்டுமா? அத்தோடு தாங்களும், அய்யா பாவாணர் அவர்களும் இதுகாறும் எழுதிக் குவித்தும் மேடைகளில் முழங்கியும் ஊட்டிய விடுதலைப் பாலினும் மேலாக வேறு எதனை இவனது நாளத்தில் பாய்ச்சி எழுச்சிபெறச் செய்வது?

பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் வெடித்த பிரஞ்சு எழுச்சிக்குக் கரணியங்கள் அந்நாட்டுக் குடிமக்கள் பட்டு வந்த அரசியல், பொருளியல், குமுகாய ஏற்றத்தாழ்வுகள்தாம் என்று கூறுவர். ஆனுல், நம் தமிழினம் அவற்றுக்கும் மேலாக, ஏறத்தாழக் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக, ஆரியப்பார்ப்பனர்களின் அளவிறந்த கொட்டங்களுக்கு அடிவருடியும், அவனுல் அழுத்தப்பட்டும் கிடக்கின்றது. சொல்லப்போனுல், பதினெட்டாம் நூற்றுண்டில் பிரஞ்சு நாட்டில் கண்டிராத பல்வேறு ஆரிய அதிகார அட்டூழியங்கள் நம் தமிழினத்தை இன்றுவரை தலையெடுக்கச்செய்யாமலும், மொழிக் கலப்பால் நம் விழிகளைப் பிடுங்கியும், இனக்கலப்பால் நம் தனித் தன்மையையும் பணிப்பாடுகளையும் பாழ்படுத்தியும் நம்மை அடிமைத்தனத்தின் மொத்த உருவாக ஆட்டிப்படைத்து மகிழ்கின்றன. ரூசோ ஒருவன் எழுதிய எழுத்துகளே சுரணை மிகுந்திருந்த அம்மறவர்களின் அடிமைத்தளையை உடைத்தெறிந்தன. ஆனுல் இங்கே? பெரியார், அண்ணு, பாவேந்தர், பெருஞ்சித்திரனுர் போன்ற புரட்சியாளர்களின் பேரிரைச்சலுபகூட இவனது களிம்பேறிய செவிப்பறையைக் கிழித்தெறியும் ஆற்றலை இழந்துவிட்டது.

பாவலரேறு அவர்கள் தலைமையுரை!

எனவே எங்கள் அரிமா நெஞ்சமே! கழகமுதல்வர் அவர்களே! தனித்தமிழ்த் தலைவர் அவர்களே!

கெஞ்சுவதில்லை பிறர்பால்;
அவாசெய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை, மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

என்ற தங்கள் சூளுரையை எங்கள் வாழ்க்கையின் இலக்காகக் கொண்டிருக்கும் எங்களை வழி நடத்திச் செல்லத் தலைமையேற்றிருக்கும் தங்களை வருக, வருக என உளமார நெஞ்சார வாழ்த்தி வரவேற்கிறோம்.

பேரன்புகெழுமிய நீண்டநாள் தென்மொழி அன்பர், பாவலரேறு அவர்களின் உள்ளத்தில் பாங்குறத் தனி இடம் பெற்ற பண்டுவர் இளங்கோ அவர்களே! தங்கள் தமிழ்த் தொண்டு கண்டு நாங்கள் மிகவும் பெருமிதமடைகிறோம். தங்கள் "கவின் மருந்தகம்" ஒரு தமிழ்ச் சோலையாக விளங்கும் பாங்கானது. தங்கள் கவின் மருந்தகத்தில் 'நம்பி அங்காடி' என்றும், 'பண்டுவர்' என்றும், இப்படித் தனித் தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தி மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தங்களை எத்தனைத் தமிழ்ச் சொற்களால் பாராட்டினுலும் தகும். தன்மானமும் தமிழும் ஒன்றிணைந்த தங்களுக்கு ஈடு இணை எவரும் இல்லை. அத்தோடு கழகத் தமிழன்பர்களைக் காணும்போது, தாயுள்ளம் போல் அரவணைத்துக் கட்டிக்காத்துப் பரிவுகாட்டும் தங்கள் பேரன்பையும் வலது கை கொடுப்பது இடது கைக்குத்தெரியக்கூடாது என்ற கொள்கையையும் கொண்டு, தமிழுக்காகவே தங்கள் வாழ்க்கையை ஒப்படைத்திருக்கும் தங்களை வருக, வருக என உளமார, நெஞ்சார வரவேற்கிறோம்.

பல்சுவையறிவும் ஒருங்கு திரண்டு பதின் கவன நிகழ்ச்சிகளை நாடுபூராவும் பரப்பிக் குறளுக்கு நற்பணி புரிந்துவரும் திருக்குறளார் பெ. இராமையா அவர்களே!

உ.த.மு.க. முதல்வருடன் பெரியார் மாவட்ட, வட்டப் பொறுப்பாளர்கள்.

தாங்கள் திருக்குறளில் கொண்டிருக்கும் பேராற்றல் கண்டு வியக்காத மக்களில்லை. உலகில் பல அறிஞர்கள் வாழ்ந்து போயிருக்கலாம். உங்களுக்குப் பின் அறிஞர்களும் தோன்றலாம். இந்த அறிஞர்கள் அத்தனைப்பேருக்கும் ஒட்டு மொத்தமாகத் தலைவரென்று சொல்லத்தகுந்தவர் தாங்கள். நாட்டில் திருக்குறளின் பேரொளிக்கதிராகத் தாங்கள் விளங்குவது கண்டு நாங்கள் இறும்பூது எய்துகிறோம். தங்கள் பேரறிவுப் பிழம்பை எண்ணி எண்ணி வியக்கிறோம். இவ்வளவு பேராற்றலைக் கொண்ட தங்களைப்பற்றி இத் தமிழ்மக்கள் இன்னும் உணர்ந்துகொள்ளாது இருப்பதைக் கண்டு எங்கள் மனம் மிகுந்த துயரம் அடைகிறது. தாங்கள் ஒரு மேலைநாட்டவராகப் பிறந்திருப்பின், பேரறிவாளர்களின் பட்டியலிலே தலையாய இடத்தைப் பெற்றிருப்பீர்கள். இந்தக் கேடுகெட்ட தமிழ்க் குமுகாயத்தில் பிறந்ததாலேயே உங்கள் அறிவின் ஆற்றல் புரிந்து கொள்ளப்படாமல் இருட்டடிப்புப் செய்யப்படுகிறது. தமிழகத்தில் தங்களை அறிந்தவர்கள் மிகமிகக்குறைவு என்பதை நினைக்கும் போது எங்கள் தமிழுள்ளம் வெம்பித் துன்பத்தில் உழல்கிறது.

அரும்பணியாற்றிய பெரியார் மாவட்டச் செயலர் 'பாவேந்தர்' இராமலிங்கனார்.

தமிழகம் என்ற அறிவுப் பண்ணையிலே வளர்ந்த உலகம் வியக்கும் பேரறிவாளர் தங்களை வருக, வருக என உளமார நெஞ்சார வாழ்த்தி வரவேற்பதில் இம் மாநாடு பெருமை கொள்கிறது. மற்றும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கும் தமிழ்ப் பேரறிஞர்களையும், தாய்க்குலத்தையும், பொது மக்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

பள்ளிபாளையம் தொழிற் செல்வர் திரு. இரா. பொங்கியண்ணன் அவர்களின் அருளாண்மை!

கடந்த 10-4-83 - ஆம் நாளன்று ஈரோட்டில் நடந்த பெரியார் மாவட்ட உ.த.மு.க. மாநாட்டில், பள்ளிபாளையம் தொழிற் செல்வர் திரு. **இரா. பொங்கியண்ணன்** அவர்கள் அங்கு வந்திருந்த கழக முதல்வர் **பாவலரேறு** அவர்களுக்கும் பதின் கவனகர் **இராமையா** அவர்களுக்கும் பட்டாடைகளையும், மற்றைய அறிஞர் பெருமக்களுக்குக் கைத்தறியாடைகளையும் தம்செலவில் போர்த்துச் சிறப்புச் செய்த அருளாண்மை பெரிதும் பாராட்டத்தக்கது. அன்னார்க்கு மாநாட்டு வரவேற்புக்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

8-ஆம் பக்கத் தொடர்ச்சி

தனித் தன்மையும் பல்வகைச் சிறப்பும் பெற்ற, உலகின் முதன்மொழியாகிய தமிழ்பேசும் தமிழ்மக்களுக்கு, இந்தி பேசுவோர்க்குச் சமமாக அனைத்து வாய்ப்புகளும் அளிக்கும் பொருட்டுத் தமிழையும், இந்தியாவின் இணைப்புமொழி அல்லது ஆட்சிமொழி என்று அறிவிக்கும்படி தில்லி அரசை இம் மன்றம் கேட்டுக்கொண்டு ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.

மேற்படி தீர்மானிப்பதற்கு நமக்கு முழு உரிமையும் உண்டு. அப்போதுதான் உலகில் தமிழ் இனம் தன்மானம் உள்ள இனம் என்பதும், அது அதன் உரிமைகளுக்கு மக்களாட்சி முறையில் குரல் கொடுக்கிறது என்பதும் தெரியும். வெல்க தமிழர் உரிமைப் போராட்டம்.

தென்மொழி இளமாறன்.

சிங்கப்பூரில் ஆறுவது அனைத்துலக ஆராய்ச்சி மாநாடு 83-இல் நடக்குமா?

(நம் செய்தியாளர், சிங்கப்பூர்)

6-ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு எதிர் வரும் சூன் மாதம் 23 முதல். 28 வரை சிங்கப்பூரில் நடைபெறும் என்று, சிங்கப்பூருக்கு வந்திருந்த இலங்கைத் தமிழர் ஒருவரின் செய்தியை கோலாலம்பூர் ஏடு ஒன்று வெளியிட்டிருந்தது பற்றி, மலேசியாவில் கிள்ளானில் தலைமையகத்தைக் கொண்டுள்ள உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தலைவர் இர.ந வீரப்பன் கருத்துரை கூறும்போது 1984 சனவரி முதல் கிழமையில் தான் இம்மாநாடு சிங்கபூரில் நடத்தப்படுவது இயல்பு' எனத் தாம சென்னையில் கடந்த திசம்பரில், உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தாரிடம் கேள்விப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

கடந்தாண்டு சிங்கப்பூரில் மிகப் பெரிய வரவேற்புக் குழு அமைக்கப்பட்டவுடன், இது பற்றி அறிய பல நாட்டு உ.த.ப.இ கிளைகள் தம்மைக் கேட்டு வருவதாகவும் அவர் சொன்னார். ஆனால், சிங்கப்பூரிலிருந்து அச்சிட்ட அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாகவும், இதற்கு ஆதரவும் ஊக்கமும் காட்டி வரும் IATR மன்றக் கிளையான இலங்கை மட்டுமே இது பற்றிய செய்திகளை வெளியிட்டு வருகிறது என்றும, சென்னை, மலேசியா மற்றும் அதன் தலைமையகம் எதுவும இது பற்றிய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தாம் அறிந்ததாகவும், அவர் குறிப்பிட்டார். சிங்கப்பூரில் பல்வேறுபட்ட கழகங்களுக்கும், சிங்கப்பூர் தமிழர் இயக்கத்திற்கும் பலமுறை எழுதியும் தமக்கு இதுவரை எந்த மறுமொழியும் கிடைக்கவில்லை என்றார்.

சிங்கப்பூரில் IATR மன்றக் கிளை எதுவுமில்லை. இரண்டு இலக்கம் தமிழர் வாழும சிங்கப்பூரில் தமிழ் மொழி சிறப்பாக உள்ளது என்றாலும, தேசிய முறையில் தமிழர் பேரவையும் தமிழ்மொழிக் கழகமும், தேசியப் பல்கலைக் கழகமும், தமிழ் மொழிப் பணபாட்டுக் கழகமும, தமிழ் எழுத்தாளர் கழகமும் அங்கு கூடிப் பேசி அனைத்துலக மாநாட்டுக்காகத் தக்கவாறான ஏற்பாடு எதுவும் செய்யாம ருப்பது வேடிக்கையாக இருக்கிறது என்றார் இவர். ஆனால் தமிழர் இயக்கம் மிகத் தீவிரமாகப் பாடுபட்டு பொருள திரட்டுவதில் செயலாற்றி வருவதுடன், நாடகம் நடத்தியம் நன்கொடை ஈட்டுகிறது. உணவு உறைவிட உறுதிப்பாட்டையும் செய்து வருவதைத் தாம் அறிந்துள்ளதாகச் சொன்னார்.

'தென் கிழக்காசியத் தமிழியல்' என்ற ஆய்வுத் தலைப்பு இடப்பட்டதாக அறிந்து, சென்றாண்டே அத்துடன், தமி யம் என்ற கருப் பொருளையும் ஆய்வுத்திட்டத்தில் சேர்க்கும்படி கேட்டும் அவர்கள் பொருட்படுத்தவில்லை; ஆய்வுக்குழுவும் தேர்வு செய்யவில்லை. சூன் மாதத்தில் நடைபெறுவது உறுதியானால், இன்னமும ஆய்வுக் கட்டுரைகளையே பெற்றிராத நிலையில் இத்துணை விரைவாக மாநாட்டைச் சீரும் சிறப்புமாக நடத்துவது எப்படி எனத் தமிழுலகம் வியப்புத் தெரிவித்துள்ளது. முறையான அழைப்பும், பேராளர்—ஆய்வாளர் பதிவுப் படிவமும் இன்னமும் அனுப்பாதது வருந்தத்தக்கது என்றாரவர்.

மலேசியாவுக்குத் தெற்கே உள்ள சிங்கப்பூர் எல்லா வகையிலும் (அரசியல் தவிர) மலேசியாவுடன் தொடர்புபட்ட சூழலில் சிங்கப்பூரில் நடைபெறும் அனைத்துலகத் தமிழ் மாநாட்டுத் தொடர்பாக உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கம் மிக மிக அக்கறையுடன் அணுக்கமாக கவனித்து வருகிறது. எனவே, 1984 சனவரியில் தான் இம்மாநாட்டை நடத்த வேண்டும் என்று அவர் அறைகூவல் விடுத்தார்.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

படங்களைப் பற்றிச் சிலபேர் சொல்கின்றார்கள், 'ஆபாசம் இல்லைங்க'' ஆனால் மனத்தில் தான் இருககிறது!'' பெரிய அறிவியல உண்மையைச் சொல்கிறான்! மனதில் இருக்கிறதாம் ஆபாசம்! ''சரிங்க! எங்களுக்கு மனத்திலே தான் இருக்கிறது! உனக்கு ஆபாசம் அதிலே இல்லை! கொண்டு வந்து உன்னுடைய மனைவியையோ அல்லது மகளையோ கொஞ்சம் நேரம் அந்த மாதிரி உடைபோட்டு அப்படி நிறுத்தி வையேன், பார்ப்போம்! அப்பொழுது உங்களுக்கு மானம் வரும்! தன்மானம் வரும்; வெட்கம் வரும்! நாணம் வரும்! அது தான்!

எதனால் உன்னுடைய மனம் நாணுகிறதோ, எதைச் செய்ய நாணுகிறதோ, எதனால் உன்னுடைய அறிவு கூனுகிறதோ, உன்னுடைய உடல் கூசுகிறதோ, அதற்குப் பெயர் தான் ''ஆபாசம்''! ''அருவருப்பு'' இது தான் அதற்கு விளக்கம்! போதுமா? இதைவிட விளக்கம் என்ன வேண்டிக் கிடக்கிறது?

நீ அதைச் செய்வதற்கு,... நீ அதைச் செய்தாலும் செய்வாய்!... உனக்கு அதே வேலை;...நாங்கள் செய்ய முடியாது! (நிறைந்த சிரிப்பு) எனவே அதை நாங்கள் எப்படிச் செய்ய முடியாதோ, அதேபோல நாங்கள் அதைப் பார்க்கும்படியும் செய்யக் கூடாது! பொதுநலத்துக்காக உடம்பை முழுவதும்.... உடம்பு உயிர் எல்லாவற்றையும் அழித்துக் கொள்வது தான் எங்கள் வேலை! கொஞ்ச நாளைக்கு இது போல் எல்லாவற்றையும் பேசிக்கொண்டிருப்போம்! அப்புறம் செய்யத் தொடங்குவோம். இடையில் செய்ய முடியாததன்று! கொஞ்சம் நாள் கழித்தேனும் நடக்கப் போகிறது.

அதனால்தான் எழுதுகிறான் துக்ளக்கிலே! இந்தப் 'பெருஞ்சித்திரனாரிசம்' என்கிறது, காரம் குறையாத 'ஒரிஜினல்' திராவிடஸ்தான் பிரேண்ட்' அதனாலே, இவரைப் பிடித்து வாழ்நாள் சிறைபோட வேண்டும்' என்று எழுதுகிறான்! எவ்வளவு கண்காணித்துப்போட்டுக்கிறான்! பாருங்கள்! எனவே இதெல்லாம் நடக்கிறதா இல்லையா என்று பாருங்கள்!

பெரியார் போய்விட்டார்! என்றெல்லாம் நினைக்க வேண்டாம். நாம் எல்லாரும பெரியார் தாம்! கட்சி கிட்சி எல்லாம் இன்னும கொஞ்ச நாளைக்குத் தான்! அடுத்த தேர்தல் வந்தால் கட்சிகளெல்லாம இல்லாமல் போய்விடும் நீங்கள் வேண்டுமானால் பாருங்கள்! ஒன்றால், இந்த இரண்டு கட்சிகளையும அழித்து; ஏதாவது ஒரு கட்சி அங்கிருந்து வரும்! அதை அப்பொழுது உணர்ந்து கொள்வார்கள் அதை இப்பொழுது சுட்டக்கூடாது. இப்பொழுதே பார்த்து அஞ்சிக் கலங்கிப் போயிருக்கிறார்கள்!

அடுத்தது, எல்லாவற்றிற்கும் காலத்திற்கேற்ற அறிவியல் கண்ணோட்டத்தோடு ஒப்புக்கொள்ள வேண்டும். எதையும்... பொதுநலத்துக்குப் பேசினாலும சரி, பொதுநல நோக்கத்திற்குச் செய்தாலும் அதை அவரவர்களுடைய அறியாமையை பொறுத்த வரையிலே செய்யாமல், உண்மையான அறிவியல் அடிப்படையிலே 'Scientific approch'' அந்த வகையிலே சிந்திக்க வேண்டும் என்றபடி உ.த.மு.க.வுக்குச் கொள்கைகள் உண்டு. அவற்றுக்காக நாங்கள் பாடுபடுகிறோம். வெற்றி பெறுவோமா பெற மாட்டோமா என்பது பற்றியெல்லாம் நாங்கள் கவலைப்படவில்லை. முனைந்து விட்டோம். எங்கள் மூச்சு உள்ள வரை பாடுபடுவோம்! அதற்கு உங்கள் ஆதரவு தேவை! ஒத்துழைப்புத் தேவை! துணை தேவை! என்பதாகப் பேசி முடித்தார்கள்.

இனம், மொழி அழிவது முறைதானா?

என்றுமே அடிமை நிலைதானா?—தமிழன்
இனம், மொழி அழிவது முறைதானா?
இன்றிதைக் காண்பதும் சரிதானா?—ஆரிய
இனத்தவன் செய்திடும் வெறிதானா?

வென்றி சூடிட புறப்படுவோம்!— தமிழன்
விழிப்புற என்றும் திறப்படுவோம்!
மன்றெலாம் தனித்தமிழ் பேசிடுவோம்!—இந்தியா
மாயையை வெட்டியே வீசிடுவோம்!

எத்துறை யாயினும் தனித்தமிழே!—என்றும்
இனிதென ஆண்டிடப் பணிபுரிவோம்!
பித்தரின் பேதைமை ஓடிடவே!—என்றும்
பைந்தமிழ்ப் புகழினைப் பாடிடுவோம்!

முத்தமிழ் பயிர்வளம் பெற்றிடவே!—கொடு
மூடங்கள் யாவுமே எரியிடுவோம்!
நித்தமும் தமிழுக்கே உழைத்திடுவோம்!—இதே
நினைவெனக் கொண்டு நாம் செயல்படுவோம்!

—தாழை. ந. இளவழகன்
மணப்பாறை.

குகைவாழ் புலியே! கொடுவாளினை எடுப்பது எப்போது?

8—4—83 அன்றைய 'தினமணி' நாளிதழ் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது. அதில் 'கிராமப்புறப் பகுதிகளில் இந்து சமயப் பரப்புனர் பணிக்காக தொண்டர்கள் தேவை' என்னும் தலைப்பில், தகுதியுள்ளவர்கட்குச் சமயப் பயிற்சி அளிக்கப்படுமாம. எசு.எசு.எல்.சி. கல்வித்தகுதி, 18 அகவைக்கு மேற்பட்ட இளைஞர்கள், இதற்குப் பராமரிப்புச் செலவுக்காக மாதம் உரு. 300/- வழங்கப்படுமாம். (இது வேலை வாய்ப்பு அல்லவாம்: தொண்டாம்) குமுகாய ஒப்படைப்புப் பணி செய்ய விரும்புவோர் மட்டும் வேண்டுகை விடுக்க வேண்டுமாம் என்ற கருத்தோடு கூடிய செய்தியினை விசுவ இந்து பரிசத் சென்னையிலிருந்து வெளியிட்டிருக்கிறது.

மறைமுகமாக மட்டுமே அழிக்கப்பட்டு வந்த-வருகிற தமிழினம்-மொழி அனைத்தும் இனி வெட்ட வெளிப்படையாகவே அழிக்கப்படும் ஏதம் எதிர்நோக்கி விட்டது.

தன்னுடைய நாட்டிலேயே தன்னினம் அழிக்கப்படுவது வேறெந்த நாட்டிலும் நடைபெறவில்லை; ஆனை, இங்கே, நடக்கிறது! இனியும் தமிழன் குகை வாழ் புலியாகவே இருக்கப் போகின்றானா? இல்லை, கொடுவாளினை எடுக்கப் போகின்றானா? என்ன செய்யப் போகின்றான்?

—தாரை. சிதம்பர பாரதி,
தாராபுரம்.

திருக்குறளின் தேவை பற்றித் தந்தை பெரியார்

சிறிது காலத்திற்கேனும் மக்கள் தொடர்ச்சியாகத் திருக்குறளைப் படித்து மனத்திலிருத்தி வருவார்களானால் நம் நாட்டில் நம் மக்கள் வாழ்வில் உள்ளத்தில், ஒரு புதிய உணர்ச்சி உறுதியாக ஏற்படும் என்பது தான் என் கருத்து.

திருக்குறளுக்கு உரையெழுதப் புகுந்த பரிமேலழகர் திருக்குறளில் ஆரியக் கொள்கைகளை வலிந்து புகுத்தியிருக்கிறார். அதை அறிந்தும் சில பண்டிதர்கள் இன்னும் அவ்வுரையைப் பெருமைப்படுத்தி வருவது வருந்தத்தக்கது. நல்ல பண்டிதர்களைக் கொண்டு திருக்குறள் கருத்துகளை அமைத்து நல்ல பாடப் புத்தகங்களை எழுதி அதைப் படிக்கச் செய்தால் இன்றுள்ள பல துன்பங்கள் நமக்கிருக்காது. பல துன்பங்கள் நீங்கும் என்பதோடு நமக்குப் பல பலன்களும் ஏற்படும்.

திருக்குறளில் ஓர் அரசன், ஓர் உழவன், ஒரு வாணிகன், ஒரு துறவி, ஒரு பொதுநலத் தொண்டர், ஒரு மந்திரி, ஒரு காதலன், ஒரு காதலி, ஒரு தலைவன், ஒரு தலைவி ஆகிய அனைவருக்கும் அறிவுரை வழங்கப்பட்டு இருக்கிறது. அவற்றில் ஒன்றில் கூட மூட நம்பிக்கை புகுத்தப்பட்டிருக்கவில்லை.

திருக்குறள் ஒன்றே போதும் உனக்கு அறிவை உண்டாக்க; ஊக்கத்தைக் கற்பித்துக் கொடுக்க; உலக அறிவேற்பட; அப்படிப்பட்ட குறளைத் தான் நாம் இது வரை புறக்கணித்து இருக்கிறோம். ஒரு வட்டாட்சியர் (தாசில்தார்), ஒரு நடுவர் (மாஜிஸ்ட்ரேட்), ஒரு காவல் துறை ஆய்வாளர் இவர்களுக்குக் கூடத் திருக்குறள் ஒன்றே போதும் தமது வேலையைச் சரியாகச் செய்ய.

அனைவரும் திருக்குறளைப் படித்து அறிவுடைய மக்களாகி இன்புற்று வாழ வேண்டும் என்பது தான் எனது ஆசை.

—தந்தை பெரியார்.

அடிப்படை: ''திருக்குறளும், பெரியாரும்'—1948.

வெளியீடு:
பகுத்தறிவாளர் கழகம்
குருவப்பநாயக்கன் பாளையம்

அகம் கரியார்

தமிழவேள்

1. குன்றிமணி போன்றோர்!

குன்றிமணியின் நிறம் என்னவென்றால் செம்மை என்று தான் சொல்வார்கள். ஆனால் அதன் மூக்குப்போன்ற பகுதியில் உள்ளதோ கருமை நிறமாகும்.

புறங்குன்றிக் கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து —குறள் 277

அத்தகைய அகம் காரியாரை இனம் கண்டு கொண்டு எச்சரிக்கையாக இருக்கத் தவறியதால் தான் தமிழினம் ஈராயிரமாண்டுகளாகத் தாழ்ந்து கிடக்கிறது; தேய்ந்து கிடக்கிறது; பிரிந்து கிடக்கிறது என்று சொல்ல வேண்டும்.

'கேள் போல் பகை' என்றும் 'இனம் போன்று இனம் அல்லார்' என்றும், அகத்தின்னா வஞ்சர்' என்றும், 'மனத்தின் அமையாதவர்' என்றும், 'வினைவேறு சொல் வேறு பட்டார்' என்றும் 'ஒட்டார்' என்றும் 'ஒன்னார்' என்றும் குறட்பாக்களில் வருகின்ற சொற்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக இருப்பவர்கள் அவர்கள்.

அவர்கள் தங்களைப் பிறப்பால் உயர்ந்தவர்கள் என்றும் மற்றவர்களைத் தாழ்ந்தவர்கள் என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்மொழி தாழ்ந்தது வடமொழியே உயர்ந்தது என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். தமிழையும் தமிழர்களையும் அவர்கள் போற்றுவது அரிது! வடமொழியையும் தங்களைச் சார்ந்தவர்களையும் போற்றுவதோ பெரிது! தனித்தமிழை அவர்கள் வெறுக்கிறார்கள். தமிழர்கள் தாம் இழந்துவிட்ட உரிமையைத் திரும்பப் பெறுவதை அவர்கள் விரும்புவதில்லை. தமிழர்கள் என்றென்றும் அடிமைகளாகவே இருக்க வேண்டும் என்பது தான் அவர்களுடைய வேணவா! எங்கெல்லாம் எப்படியெல்லாம் தமிழுக்கும் தமிழர்க்கும் கேடு செய்ய இயலுமோ, அங்கெல்லாம் அப்படியெல்லாம் கேடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

காலம் மாறிவிட்டது. அவர்கள் திருந்தி விட்டார்கள் என்பதெல்லாம் ஒரு பகற்கனவு தான்! காலம் மாறவும் இல்லை. அவர்கள் திருந்தவும் இல்லை என்பதை நடுநிலையோடு எண்ணிப்பார்க்கின்ற எவரும் தெரிந்து கொள்ளலாம். அவர்களுடைய வல்லாண்மைதான் இன்னமும் தமிழினத்தை ஆட்டிப்படைக்கிறது. தமிழர் சிலரின் விழிப்புணர்ச்சியால் அந்த வல்லாண்மைப் பிடி சற்று தளர்ந்திருக்கலாமே தவிர, வல்லாண்மை இன்னும் அகலவே இல்லை என்பது தான் உண்மை!

ஓரிடத்தில் நெல்லைக் குவித்து வைத்திருந்தால் அதனை நெற்குவியல் என்று தான் சொல்வோம். கல்லைக்குவித்து வைத்திருந்தால் கற்குவியல் என்று தான் சொல்வோம். நெற்குவியலில் சில கற்கள் இருக்கலாம். ஆனால் அதனைக் கற்குவியல் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். அப்படியே கற்குவியலில் சில நெற்களும் இருக்கலாம் அதனால் அதனை நெற்குவியல் என்று யாரும் கொள்ள மாட்டார்கள்.

''குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'—

என்னும் வள்ளுவர் வாயுரை இணங்கத்தான் ஒரு கூட்டத்தினரை நல்லவர் என்றோ அல்லவர் என்றோ கொள்ள வேண்டும்;

அவர்களில் சிலர் சில நேரங்களில் தமிழர்களுக்கு உதவி செய்யலாம். அத்தகைய உதவியைச் செய்ய அவர்களைச் சேர்ந்தவர் யாரும் கிடைக்காதபோது தான் தமிழர்களுக்குச் செய்வார்கள். அல்லது 'புலிக்கு அஞ்சியவர்கள் எல்லாம் என் மேல் படுத்துக் கொள்ளுங்கள்' என்னும் கதை போல்' தங்களைக் காத்துக் கொள்வதற்காகவே அவர்கள் தமிழர்களுக்கு உதவி செய்வார்கள். ஆனால் இவையெல்லாம் வெளிப்படையாகத் தெரியாது. வெளியில் தெரியாத வகையிலேயே அவர்கள் அதனை மறைத்து வைத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய உள்ளத்தை—அவர்கள் உள்ளத்தில் இருப்பதை அவ்வளவு எளிதில் கண்டுகொள்ளவும் முடியாது!

நன்கு கவனித்துக் குன்றிமணியின் மூக்குப்புறத்தைத் திருப்பிப் பார்த்தால் அன்றி அங்குள்ள கருமை நிறம் கண்ணுக்குத் தோன்றாது. குன்றிமணி போன்றவர்களுடைய எண்ணத்தையும் சொல்லையும் செயலையும் நன்கு கவனித்து நோக்கினால் அன்றி அவர்களுடைய கருத்த உள்ளத்தைக் காண முடியாது. அவர்கள் தமிழுக்கும் தமிழர்க்கும், தமிழகத்துக்கும் எண்ணிச் சொல்லிச் செய்து வருகின்ற தீங்குகளைத் தெரிந்து கொள்ள முடியாது, எடுத்துக் காட்டாக சிலவற்றைத் தமிழர்கள்—குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் தெரிந்து கொள்வதற்காக எடுத்துக் காட்டுகிறேன்.

ஆங்கிலத்தை - இயலாவிடின் தமிழையும் இந்தியாவின் இணைப்பு மொழி ஆக்குக!

இந்திரா கட்சியினர், தமிழகத்தில் தனித்துப் போட்டியிட்டுப் பத்து விழுக்காடு கூட உறுப்பாண்மையைப் பெற முடியாமையைக் கண்டோம். ஒரு காலத்தில் ஓகோ என்றிருந்த பேராயக் கட்சிக்கு இன்று பல பகுதிகளில் அமைப்பே இல்லை. மேலும் அதற்குத் தலைமைகள் தாம் உண்டேயொழியத் தொண்டர்கள் இல்லை. தமிழகத்தில் பேராயத்தை அழித்து ஒழித்த பெருமை முன்னாள் முதல்வர் பக்தவச்சலத்தையே சாரும். இதற்காக ஊருக்கு ஊர் பாம்டக்குச் சிலை செய்திருப்பது போல பக்தவச்சலத்திற்கும் சிலை செய்து வைத்தால் பழைய வரலாற்றை நினைவு கூறுவதற்கு அது உதவும்,

துழுக்கித் துரைத்தனத்தால் இந்தியை நுழைத்து விடலாம் என்று கருதியவர்கள் இன்று இருந்த இடமோ இருக்கும் இடமோ தெரியவில்லை. இந்த நிலையில் இந்தியெதிர்ப்புக் கட்சிகளான. அ. தி. மு. க., தி. மு. க. ஆகிய கட்சிகளின் உதவியால் அஃதாவது இந்தியை எதிர்க்கும் மக்களின் ஒப்பேலைகளைப் பெற்று சட்ட மன்றத்தில் நுழைந்துவிட்ட ஒரு வாய்ப்பை இன்றும் இந்திக்கு வால் பிடிப்பதற்குப் பயன்படுத்துவது உண்மையிலேயே நன்றி கொன்ற செயல். நன்றி கொன்றவர்க்கு என்றும் உய்தியில்லை என்பது வள்ளுவர் வாய்மொழி.

இந்திக்கு வால்பிடித்த பழைய பெருந்தலைகள் எல்லாம கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிப் பின் அதுவும் தேய்ந்த கதையாகப் போனதை அறிவோம். உரிமை உணர்வுகள் மலர்ந்து வருங்காலத்தில், ஒற்றுமை ஒருமைப்பாடு என்று உதட்டளவில் மட்டும் பேசி இந்தியாவின் பல்வேறு இனங்களை உத்திரபிரதேச முதலாளிகளுக்கும் மக்கள் இனத்திற்கே பகைவர்களான ஆரியப் பார்ப்பனர்களுக்கும் என்றும் எப்படியும் அடிமைகளாக்கி வைத்திருப்போம் என்ற கனவுகளை இனிமேலாவது தேசியம் பேசுவோர் காணாமல், உண்மை நிலைகளை உணர்ந்து, உரிமை உணர்வுகளை மதித்து அனைவரையும் சமமாகப் பாவிக்கும் முறையில, நடைமுறைகளை மாற்ற வேண்டும். இல்லையேல் அவர்களுக்கும் அவர்கள் தேசிய இயக்கத்திற்கும் அவர்களே பகைவர்களாகி, ஒரே இந்தியா என்ற நிலை சுக்கு நூறாக உடைத்துவிடும் எனபதை மறக்க வேண்டா.

இனி தந்தை பெரியாருக்கும், அறிஞர் அண்ணாவிற்கு பிறகும் திராவிட இயக்கம் என்று கூறிக்கொண்டு தமிழினத்திற்குக் கேடாக வடவருக்கு வால் பிடித்துச் சட்ட மன்றத்தில் இந்திக்கு ஆதரவு இடம் பெற்றுத்தந்து தன்னை அழித்துக் கொண்ட தி. மு. க. வும அடங்கிக் கிடந்த சாதி உணர்வுகளை எழுப்பி விட்டும் வஞ்சகப் பார்ப்பன இயக்கமான R. S. S. இந்து முன்னணி. போன்ற ஆரியர்க்குப் பாய்விரித்தும், அமைதிப் பூங்காவாய்த் திகழ்ந்த தமிழகத்தைச் சாதிமதப் போர்க்களங்களாக்கி, ஆட்சி எனும் பேரால் தமிழ் மக்களை அடிமைகளாக்கி வரும் அ. தி. மு. க. வும், இனிமேலாவது திருந்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

''கனவினும் இன்னாது
மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார்
தொடர்பு''

என்னும் குறள்மொழிக் கேற்ப மக்கள் வெறுக்கத் தொடங்கு முன் உங்கள் போக்கை மாற்றிக் கொள்ளுங்கள். சட்ட மன்றங்களில் நீங்கள் போடும் குழாயடிச் சண்டைகள் தமிழ்மானத்திற்கே இழுக்கு.

எனவே தமிழ் மக்களின் சார்பாளர்களாக உள்ள உங்கள் அனைவரையும் கீழ்க்காணுமாறு தமிழகச் சட்ட மன்றத்தில் ஒரே மனதாகத் தீர்மானம் நிறைவேற்றித் தமிழ் மானத்தைக் காப்பாற்ற வேண்டும் என வேண்டுகிறோம். ஏனெனில் இன்று பஞ்சாப், அசாம் போன்ற இடங்களில் உரிமைக் குரல்கள் உரக்க ஒலிக்கத் தொடங்கிவிட்டன. இனியும் சாவுக்குரலில் நம் தொடை நடுங்கித் தனத்தை உலகத்திற்குக் காட்ட வேண்டா: ஓர் இனம் வாழ்க்கைக்குப் போராடுவதை விடுத்து உரிமைக்கே முதலில் போரட வேண்டும். அதுவே அவ்வினத்திற்குக் காப்பு. இதை மறந்ததால் தான் நாம் இதுவரை எடுத்த முயற்சிகள் அனைத்தும தோல்வியுற்றன. எனவே முதலில் மொழி உரிமைக்காகவாகிலும் அதாவது எங்கும் எதிலும் தாய் மொழியில் பேசும் உரிமைக் காவாவது போராடுவோம்.

தீர்மானம்

உலகின் முதல் மாந்தன் பேசிய மொழியும், திரவிட மொழிகளுக்குத் தாயும், ஆரிய மொழிகளுக்கு மூலமும் இன்னும் பழைமை வாய்ந்த உலக மொழிகளுக்கு வேராகவும் விளங்கி, கி. மு. ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொட்டு இலக்கிய இலக்கணச் சிறப்புகளைப் பெற்று வளர்ந்து வந்த நிலையில், கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக ஆரியத்தால் அலைக்கழிக்கப்பட்டுப் பல்வேறு திரவிட மொழிகளாய்ச் சிதைந்து, இந்தியாவின் வடக்குப் பகுதி வரை (அரப்பா, பொகஞ்சதாரோ நிலப் பகுதிகளில், பெருமை பெற்ற நிலைகளை எல்லாம் இழந்து, இன்று தமிழகத்தில் மட்டும் அழிக்கப்படாமல் உயிர் வாழ்ந்து வருகின்றது தமிழ்மொழி. இதனுடைய பண்டைய வரலாறுகளையெல்லாம் ஆங்கில வரலாற்றாசிரியர்கள் வழியும், இன்று தமிழ், தமிழ்நில வரலாற்று ஆசிரியர்கள் வழியும் உணர்ந்து, இனியேனும் எங்களுக்கு அழிவும் சிதைவும் வராவண்ணம், எங்கள் பழைய பெருமை நிலைகளைக் காப்பாற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

எனவே, இப்படிப் பெருமை பெற்ற மொழியின் சிறப்புகளை மறந்து விட்டு இந்தியாவின் வட பகுதியில் ஏறத்தாழ 27% மக்கள் பேசும் ஒரு கலவைச் சிறுமொழியை இந்தியாவின் இணைப்பு மொழி, அல்லது ஆட்சி மொழி என்று ஏற்று எங்களைச் சிறுமைப்படுத்திக் கொள்ள நாங்கள் இயலா நிலையில் உள்ளோம் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!! என்பது எங்களின் தமிழ்ப் பண்பாடாதலால் உலகம் முழுமையையும் சம உரிமைகளுடன் ஒன்று கூட்டும் எண்ணம் கொண்ட நாங்கள், இந்திய ஒற்றுமைக்காக இந்திய மக்கள் அனைவருக்கும் சமமான சுமையாவதும், வருங்கால அறிவியல் வளர்ச்சிக்கும், உலகத் தொடர்புக்கும் துணை செய்வதுமான, நம் இந்தியாவை ஒன்றிணைத்த ஆங்கிலம்ஒன்று மட்டுமே இணைப்பு மொழியாக இருப்பதை ஏற்கிறோம். அப்படி வட நாட்டுப் பகுதிகளில் ஆங்கிலத்தை ஏற்பதற்குத் தவறுவார்களேயானால்,

எங்களின் தனித்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கத்தோடும், தமிழ்நாடு தவிர்த்த பிற மாநிலங்கள் அனைத்தும் இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டதை முன்னிட்டும், பிறரைப் போல் இந்தியை ஆட்சி மொழியாக ஏற்கவியலாத,

(6 ஆம் பக்கம் பார்க்க)

உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல், அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)\657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணைசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டுக் கட்டணம் ரூ. 36/-
அரையாண்டுக் கட்டணம் ரூ. 18/-

பெறுநர்.
நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனர், அச்சிடுவோர் 'தென்மொழி' அச்சகம், 5, அருணைசலத் தெரு, சென்னை-5.